555

ஸம்புடம் 13
ஸஞ்சிகை 1

ஸ்ரீ:

விஜய ஹு
தை மீ

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரிகை]

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

தனிப்ரதி விலை 0—4—0

JANUARY 1954
VOL 13 NO 1.

JL
N5#-13-1
199543

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 2
2. செய்திகள் 8
3. ஆழ்வாராசார்யர்களின் அவதாரம் 9
[ஸ்ரீ. உப. பவுண்டரீகபுரம் நரஸிம்ஹாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]
4. திருப்பாவைக்கதை 11
[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O. L. திருப்பதி.]
5. அன்னமயம் 15
[ஸ்ரீ. உப. வேதாந்தவாவதூக, வித்வான், வில்லிவலம் நாராயணாசார்யஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]
6. கலியன்கண்ட கடன்மல்லைக்கண்ணன் 18
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]
7. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 21
8. ரஸோக்திகள் 23
[ஸ்ரீ. உப. வித்வான், புரிசை, நடாதூர் க்ருஷ்ணமாசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]
9. ஜிதகர்ணன் 25
[ஸ்ரீ. உப. பாதூர், தூப்புல் ராமபத்ராசார்யஸ்வாமி, சிரோமணி, திருவுள்ளூர்.]
10. ஸ்வாகதபத்ரிகைகள் 29

ஸ்ரீகோதாஸ்துதி:

ஸ்ரீ ஆண்டாள் விஷயமாக ஸ்ரீதேசிகன் ஸாதித்திருக்கும் ஸ்ரீகோதாஸ்துதிக்கு எளிய தமிழ்நடையில் அர்த்தத்துடன் கூடிய புஸ்தகம் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸில் கிடைக்கும். விலை அணு நான்கு. முன்னதாக 0–5–0 ஸ்டாம்பு (தபால் செலவு உள்பட) அனுப்புபவர்களுக்கே ஷை புஸ்தகம் அனுப்பப்படும்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 13 } விஜய ஸூ தை மீ { ஸஞ்சிகை 1

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमोभगवते पुरुषाय तस्मै ॥

क्षुत्तृष्णालोपमात्रे सततकृतधियो जन्तवस्सन्त्यनन्ता-
स्तेभ्यो विज्ञानवत्त्वात्पुरुष इव वरस्तज्जनिर्दुर्लभैव ।
तत्राप्यात्मात्मनः स्यात्सुहृदपि च रिपुर्यस्त्वयि न्यस्तचेता
स्तापोच्छित्तेरुपायं स्मरति स हि सुहृत्स्वात्मवैरी ततोऽन्यः

[(இவ்வுலகினில்) தங்களுடைய பசி, தாகங்களைபட்டில் த்ருப்தி செய்து கொள்ளுவதில் ஈடுபடும் ஜந்துக்கள் அநேகம். இவைகளில் மனிதப்பிறவி மிகவும் உயர்ந்தது. ஏனெனில் மனிதனுக்கே பகுத்தறிவு (ஆன்மீக வளர்ச்சிக்குறிய ஸந்தர்ப்பம்) அதிகம். அப்பிறவி யடைவதே துர்லபம் அதிலும் ஒருவன் தானே தன்னுடைய மித்ரனாகவும், சத்ருவாகவும் ஆகிறான். எவன் உன்னையே நினைத்து (அதன் மூலம்) தன்னுடைய கஷ்டங்களைப் போக்கிக்கொள்ள முயற்சிக்கிறானோ அவனே தன்னுடைய நண்பன். மற்றவன் விரோதியே.]

இவ்விதமாக ஸ்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணனை நாம் எக்காலமும் த்யானித்து அதன் மூலமாகவே நம்முடைய ஆன்மீகவளர்ச்சியை உண்டாகிக்கொண்டு பேரின்பம் அடைய முயலுவதே நாம் செய்ய வேண்டிய முறை என்பதை வெகு அழகாக ஓர் கவி வர்ணித்துள்ளார்.

'அரிது, அரிது, மானிடராய்ப்பிறத்தலரிது' என்ற சான்றோர் கூற்றும் இதையே பின்பற்றியது.

"ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்றன் நாமங்கள், தானத்தால் மற்றவன் பேர் சாற்றினால்— வானத்தணியமராக்குவிக்கு மஃதன்றே, நங்கள் பணியமரர்கோமான் பரிசு" என்று ஆழ்வாரும் அருளிச்செய்தார். அதாவது- நமக்கு சேஷியான ஸர்வேச்வரனுடைய அஸாதாரணமான திருநாமங்களையும், மற்றும் உயர்ந்த குணங்களைச்சொல்லும் அவனுடைய திரு நாமங்களையும் ஜ்ஞாநத்தாலே நன்றாக உணர்ந்து பக்தியோடு நாம் சொன்னால், நமக்கு பந்துவாய், கைங்கர்யபரருமான நித்யஸூரிகளுக்கும் ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய ஸ்தானமான ஸ்ரீவைகுண்டத்துக்கு அலங்காரமான நித்யஸூரிகளோடு ஸமானமாக (அதுவே) செய்விக்குமல்லவா என்பதை நமக்கு எடுத்துக் கூறினார்.

'நாமம் பல சொல்லி நாராயணாவென்று
நாமும் கையால் தொழுது ......' என்று

மற்றொரு ஆழ்வாரும் அநுஸந்தித்தார்.

இப்படி பகவந்நாமஸங்கீர்த்தனமே நமக்கு பரமபாக்யத்தை விளைவிக்கக் கூடியதென்பது பற்பல விடங்களில் ஆழ்வாராசார்யர்களால் நமக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ பகவத் பக்திபீடத்திற்கு ஸ்ரீபகவந்நாம ஸங்கீர்த்தனம் ஒருபடியாகும். பற்பலபடிகளைக் கடந்தே ஓர் உன்னத ஸ்தானத்தை அடையவேண்டி யிருக்கிறதல்லவா? உலகில் ஸர்வஸாமான்யரும் ஸ்ரீபகவத்குண, நாமகீர்த்தனங்களினால் பக்தர்களாகிவிடுவதை நாம் பல காலம் கேட்டதுமுண்டு. பார்ப்பதுமுண்டு. பாரததேசத்தில் பெரும்பாலும் பகவந்நாமஸங்

கீர்த்தனத்தினால் பல பெரிய பாகவத பக்த சிகாமணிகள் ஏற்பட்டிருப்பதையும் அவர்களின் ஸாமர்த்தியத்தினால் பல பாமரர்களும் பக்தர்களாகிவிடுவதையும் நாம் காண்கிறோம். புரந்தரதாஸர், சைதன்யர் போன்ற பக்தர்களே இதற்குச் சான்றாவார்கள். தஞ்சாவூர் ஸமீபம் வஸித்துவந்த தியாகராஜரும் பக்திப் பெருக்கான பாடல்கள் மூலமாகவே பலரைச் சீர் படுத்தியிருக்கிறதையும் நாம் பார்க்கிறோம்.

ருக்மிணிப்பிராட்டி கூட **'श्रुत्वा गुणान् भुवन सुन्दर! शृण्वतां ते निर्विश्य कर्णविवरैर्हरतोऽङ्गतापम्'** என்று ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவின் குணங்களைக் கேட்டே அவனிடம் அன்பு பூண்டதாகக் கூறுகிறாள். பகவத்குணங்களைக் கேட்டமாத்திரத்தில் நமக்கு ஏற்பட்ட காயிக, மானஸிக தாபங்கள் விலகுகின்றன என்றால் இம்மாதிரியான ஸ்ரீபகவந்நாமஸங்கீர்த்தனங்களில் நாம் ஈடுபடுவதால் நாம் பெரும் பாக்யத்தையல்லவா அடைகிறோம். இக் காரணங்களினாலேயேதான் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமபாராயணம் நம் முன்னோர்களால் மிகவும் போற்றப்பட்டது. இம்மாதிரியான பாராயணங்கள் மனோவிகாஸத்தை நமக்குக் கொடுப்பதுடன், சரீரப்ரயுக்தமான வ்யாதிகளையும் போக்குகின்றன.

நம் பூர்வாசார்யர்கள் ஸ்தோத்ரபாடங்களாலும், வாழித்திருநாமங்களாலும் ஸ்ரீ பகவந்நாமாவளிகளையும், குணங்களையும், பூர்வாசார்யர்களின் குணாதிஶயங்களையும் நாம் நன்கு அறிந்து அநுஸந்திக்க வழி செய்தார்கள். எக்காலத்திலும் எந்த விதமான ஸமூஹத்திலும் இம்மாதிரியான ஸ்ரீ பகவத் பாகவத குணகீர்த்தனங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இப்பொழுதும் நடைமுறையிலிருக்கின்றன. 'முயன்று தொழு நெஞ்சே' என்று ஆழ்வாரும் பகவத் குணாதிஶயங்களை நினைத்து ஸ்தோத்ரம் செய் என்று தன் மனத்தை ஏவினார்.

ஸ்ரீ பகவத்பக்திக்கு மிகவும் ஸுலபமான வழி நாம, குண்ஸங்கீர்த்தனங்களே. பலகாலும் வாயினால் பாடி, மனத்தினால் சிந்தித்தால் நாம் நற்பயனை அடைவது திண்ணம். 'கோவிந்தா! உன்னைப் பாடிப் பறை கொள்வோம்' என்று ஆண்டாளும் கண்ணன் விஷயமாய்ப் பறை சாற்றினாளல்லவா? ஸ்ரீவத்ஸாங்கமிச்ரரும் ஸ்ரீஸ்தவத்தில் தேவியின் குணங்களை ஸ்தோத்ரம் செய்ய விரும்பியவராக—

'हे श्रीर्देवि! समस्तलोकजननीं त्वां स्तोतुमीहामहे युक्तां भावय भारतीं' என்று தேவியைப் பார்த்து யுக்தியான, தகுந்த மொழியைத் தனக்கு அளிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறார்.

இவ்விதம் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் ஸ்ரீபகவத்குணகீர்த்தனங்களில் ஈடுபடவேண்டியது மிகவும் அவசியம். படுக்கையிலிருந்து எழுந்தவுடன் ஶ்ரிய:பதியின் ஸ்தோத்ரங்களைச் சொல்லிக்கொண்டு எழுந்திருப்பதால் ஒவ்வொரு நாளும் ஸுதிநமாகவே ஆகும் என்பதை நம் மனத்திற் கொள்ளவேண்டும். மற்றும் அன்றாடம் கார்யங்களைத் துவக்கும் முன் ஸ்ரீபகவத்ஸ்தோத்ரபாடங்களை அநுஸந்தித்துப் பிறகு கார்யங்களைத் துவக்கவேண்டும். மற்றும் பல காலங்களிலும் தனித்தனியாகவும் ஓர் ஸமூஹத்தினராகவும் (அதாவது பக்தஜனகோஷ்டியிலேயும்) ஸ்தோத்ரபாடங்களைச் சொல்வதால் நம்முடைய புத்திவிகாஸமும் பக்திப்பெருக்கும் ஏற்படுவதுடன் மற்றைய ஸாமான்யர்களுக்கும் எடுத்துக்காட்டாகவும் இருக்கக்கூடும். நமக்கு ஏற்பட்ட பல கடமைகளில் இதுவும் ஒன்று. மிகவும் முதன்மையானதும் கூட.

* * * * * * *

திருநாராயணபுரத்தில் சில காலம் எழுந்தருளியிருந்து செல்வப்பிள்ளையை பலகாலம் மங்களாஶாஸனம் செய்த பிறகு 'ஸாளக்ராமம்'

ஸ்ரீமதழகியசிங்கரின் ஸஞ்சாரம்

முதலிய க்ஷேத்ரங்களுக்கு ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளியாயிற்று. திருநாராயணபுரத்தில் ஸ்ரீமதாதிவண் ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் ப்ருந்தாவனத்தை மிகவும் அழகாகக் கட்டும்படி ஸ்ரீநியமனமும் ஆயிற்று. அதை கடாக்ஷிப்பதற்காக மறுபடியும் திருநாராயணபுரத்திற்கே

ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளியாயிற்று. இங்கிருந்து தொண்டனூர் முதலிய இடங்களுக்கு எழுந்தருளி பிறகு கோயம்புத்தூர் எழுந்தருளுவதாக ஸ்ரீ திருவுள்ளம்.

* * * * * * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆரம்பித்து பன்னிரண்டு ஆண்டுகள் முடிவடைந்தன. இம்மாதம் முதல் புத்தாண்டு தொடங்குகிறது. பழையது போதலும், புதியது புகுதலும் உலக இயல்பல்லவா?

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் புது வர்ஷம்

அதே போல் 'ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா' அமைப்பு, நிர்வாஹம் முதலியவைகளில் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. பல தடவைகளில் நம் நண்பர்களுக்கு விஜ்ஞாபித்திருப்பதுபோல் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா நிர்வாஹச் செலவு ஏராளமாக ஆன போதிலும், பல அன்பர்கள் சந்தாத் தொகைகளை அனுப்பாமலேயே இருக்கிறார்கள். க்ருபையுடன் தங்கள் பழைய சந்தாத் தொகைகளையும், புது வர்ஷச் சந்தாவையும் சீக்கிரமாகவே அனுப்புவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

புது ஸஞ்சிகைகளில், வாசகர்கள் பெருவாரியாகக் கேட்கும் விஷயங்களை எழுதுவது என்ற நோக்கம் கடைபிடிக்கப்படும். வைதிகமதஸம்பந்தமான பத்ரிகையானபடியால் வைதிகவிஷயங்களையும், அதற்கநுகுணமான வேத, புராணாதிவாக்யங்களையும், பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளையும் பெருவாரியாக ப்ரசுரிக்கும்படி இருக்கிறது. கூடியவரையில் அவைகளை எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்து அச்சிடுவோம். இன்னும் ஏதாவது அபிப்ராயங்கள் தெரிவிக்கப்பட்டால் கூடியவரையில் அவைகளை அநுஸரிப்போம்.

மேன்மேலும் ஆஸ்திக அன்பர்கள் புது சந்தாதாரர்களையும் சேர்ப்பதற்கு உதவி புரிவார்கள் என்று நம்புகிறோம். இனியும் சந்தாதாரர்கள் அதிகரித்தால், சஞ்சிகையில் பல அரிய படங்களையும் ப்ரசுரிக்க முடியும். அதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்து வருகிறோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * * * * * *

ஸ்ரீமதஹோபிலமடத்தில் மூர்த்தாபிஷிக்தர்களாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமதழகியசிங்கர்கள் ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்யர்களாயும், ஸ்ரீமத்ராமாநுஜஸித்தாந்தநிர்தாரகர்களாயும், ப்ரவர்த்தகர்களாயும், எழுந்தருளி இருந்தார்கள் என்பது ஆஸ்திகர்களெல்லோருக்கும் நன்கு தெரிந்தவிஷயமே. இவைகளுக்கநுகுணமாகவே வேத, ப்ரபந்த, புராண, ஶாஸ்த்ராதிகளில் பயிற்சி பெற்று ப்ராவீண்யம் அடைந்த பண்டிதோத்தமர்களை பலகாலும் பஹுமானித்தும், உத்ஸாஹம் காட்டியும், ப்ராசீனர்களின் உயர்ந்த க்ரந்தங்களை அடிக்கடி ப்ரசுரித்தும் வந்திருக்கிறார்கள்.

ஸ்ரீ அஹோபிலமடம் வித்வத் ஸதஸ்

இம் மாதிரியான மதப்ரவர்த்தகமான கார்யங்களுடன் நில்லாமல் விசேஷமான ஓர் வித்வத் ஸதஸையும் வார்ஷிகமாக நடத்தவேண்டுமென்று ஸ்ரீமதஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்தாபிஷிக்தராய் எழுந்தருளி இருந்த ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம் பற்றி உபக்ரமித்த வித்வத் ஸதஸ் தினேதினே வ்ருத்தி அடைந்து பதிமூன்று வர்ஷங்களாக நடத்தப்பட்டுவருகிறது. இம்மாதிரியான ஓர் விசேஷ ஏற்பாடு ஸ்திரமாக இருக்கவேண்டுமென்றும் ஸ்ரீமதஹோபிலமடத்தின் ஆஸ்தானத்தை அலங்கரித்துவரும் ஸ்ரீமதழகியசிங்கர்களின் திவ்ய திருநக்ஷத்ர மஹோத்ஸவ ஸமயங்களில் நடத்தப்படலாமென்றும் ஸ்ரீமதழகியசிங்கர் திருவுள்ளம் பற்றியாகியிருந்தது. அதை அநுஸரித்து ஸ்ரீமதஹோபிலமடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகிய சிங்கரின் திவ்யதிருநக்ஷத்ரமாகிய கார்த்திகைப் பூராட நன்னாளில் இந்த ஸதஸ் பல வித்வான்களால் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நம் ஸ்ரீமதழகிய சிங்கர் ஸஞ்சார காலங்களிலெல்லாம் சிலபண்டிதர்கள் ஒன்றுசேரும் ஸமயங்களிலெல்லாம் வித்வத்ஸதஸ்நடத்தி உசிதமான வித்வத்ஸம்பாவனைகளையும் இதர ஸௌகர்யங்

களையும் அநுக்ரஹித்ததுடன் வார்ஷிகமாக நடக்கும் வித்வத்ஸதஸ், ஷெஸதஸ் உபக்ரமித்தருளின நம் ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்யதிரு நக்ஷத்ரமஹோத்ஸவமாகிய தை, உத்திராடத்திலேயே நடந்துவரவேண்டுமென்று திருவுள்ளம் பற்றியது மிகவும் உயர்ந்த நோக்குடன் கூடியதென்பது எல்லோருக்கும் விளங்கும். அதையநுஸரித்து தை உத்திராடத்திற்கு முன்னதாகவே ஸதஸ் ஆரம்பித்து பத்து தினங்கள் விசேஷமாக ஸ்ரீஸந்நிதியில் நடக்கும். இது விஷயமான ஓர் ஆஹ்வானம் இப் பத்திரிகையில் மற்றோர் இடத்தில் விவரமாகக் காணப்படுகிறது. வித்வான்கள் எல்லோரும் உத்ஸாஹிகளாக நடக்கவிருக்கும் ஸதஸ்ஸில் அந்வயித்து ஸ்ரீராமாநுஜஸித்தாந்தஸ்தாபனத்திற்கு தங்களது ஶக்திக்கநுகுணமாக கைங்கர்யம் செய்து ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடையவும், ஸ்ரீமதழகியசிங்கருடையவும் பரிபூர்ணக்ருபைக்குப் பாத்ரர்களாவார்கள் என்று நாம் நம்புகிறோம்.

* * * * * * *

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன் உலகை ஸ்ருஷ்டித்து, லோகஸம்ரக்ஷணார்த்தம் வேதத்தை நமக்குதவி இன்னும் பல ஸௌகர்யங்களையும் அருளியிருக்கிறானென்பது அறிவாளிகளுக்குப் புலனாகும். வேதம் ஸ்ரீபகவானுடைய அருள்மொழியே. உலகப்பேருக்கு இது ப்ரணவத்துடன் உபக்ரமித்து **'शान्तिः शान्तिः शान्तिः'** என்று முடிவடைவதிலிருந்து. பகவத்ஸ்வரூபத்திலிருந்து **'अथ बहु स्यां'** என்ற பகவத்ஸங்கல்பத்தால் உண்டாகி பிறகு ஸ்வஸ்தமாகவே பகவத் ஸம்பந்தத்தையும் அடைகின்றன என்பது நன்கு விளங்குகிறது.

'अहिंसा परमो धर्मः' என்ற வாக்குக்கு ஒப்ப நிரபராதிகளை வீண் ஹிம்ஸைகளுக்கு ஆளாக்குவது பிசகு என்பதும் தெளிவாகிறது. இப்படியே பல புராணங்களும், பூர்வாசார்யர்களும் ஸாதித்திருக்கும் காலத்தில் நம்மில் சிலருக்கு இது மனத்தில் படாதது வருந்தத்தக்கது. மனோவாக்காயங்களினால் எவருக்கும் தீங்கிழைக்காதவரே அஹிம்ஸையைக் கடைப்பிடிப்பவர் ஆவர். மற்றவரெல்லோரும் ஹிம்ஸாகார்யங்களில் ஈடுபடுபவர்களே. இது தனிப்பட்டவர்களின் விஷயத்தில் காணப்படும் நிலைமை.

இதேபோல் நம் ஸமூஹத்திலும், தேசத்திலும், பக்கத்து தேசங்களிலும், இதர தூர தேசங்களிலும் ஸமீபகாலத்தில் இதே மாதிரியான ஓர் புயல்சாற்று அடிப்பதை நாம் கண்டு அஞ்சவேண்டியிருக்கிறது.

தத்காலம் உலகிலுள்ள பெரும் தேசங்கள் ஒவ்வொரு நாளும் தங்களுடைய யுத்த ஆயுதங்களை பெருக்கிக்கொண்டே இருக்கின்றன. அணுகுண்டு, ஜலவாயுகுண்டு முதலிய பயங்கரமான ஆயுதங்களையும், ஆகாயவிமானங்கள், யுத்தக்கப்பல்கள், டாங்கிகள், பீரங்கிகள் முதலிய ஆயுதங்களைப் பெருக்குகின்றன. இம்மாதிரி யுத்தஸன்னத்தம் செய்வதென்பது பொருளாதாரநிலையில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளுக்கு ஸாத்யமேயானாலும், சிறிய நாடுகளுக்கு இது மிகவும் ச்ரமத்தைக் கொடுக்கிறது. புதிதாக ஜனநாயக ஆட்சியில் முன்னேறிக்கொண்டிருக்கும் சிறிய நாடுகள் பொருளாதார நிலைமைக்கேற்ப இம்மாதிரி ஆயுதப் போட்டியில் ஈடுபட முடியாது. நிற்கவும் இம்மாதிரியான போட்டி முடிவில் தேசங்களின் க்ஷேமத்தையே பாதிக்கக்கூடியன. யுத்ததளவாடங்களைப் பெருக்கிய பிறகு எப்படியாகிலும் அவைகளுக்கு ப்ரயோஜனம் என்ன என்பதை யோசிக்கவேண்டியிருக்கிறது. முடிவில் மேற்சொன்ன தேசங்கள் யுத்தத்திலேயே பங்கெடுத்துக் கொள்ளுகின்றன.

நவீனகால யுத்தங்களைப் பார்க்கில் ஒரு சில நாடுகளுடன் யுத்தங்கள் நிற்காமல் உலகமுழுவதையுமே பாதிக்கிறதாக முடிகிறது. தனிப்பட்ட முறையில் யுத்தத்திலிருந்து விலகி நின்றாலும், நம்மை விடுவதாயில்லை. எப்படியாவது ஸமாதானத்தையே விரும்பும் நாட்டை பல துறைகளிலும் பாதிக்கின்றன. இம்மாதிரி நவீனகாலஸ்திதிகள். இப்படி யுத்தங்களினால் ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களைத் தவிர்க்கவே நம் நாடு ஸமாதானத்தை விரும்புகிறது. அதனால்தான் உலகவ்யவஹாரங்களில் நம் நாடு

ஓர் மத்யஸ்தநாடாக உயர் நிலையில் பஹூமானிக்கப்படுகிறது. இப்படி நாம் ஸமாதானத்தையே விரும்பினாலும் உலகப்போக்கு நம்மை விடுவதாக இல்லை. நமக்கு ஸமீபநாடாகிய பாக்கிஸ்தான் மேற்சத்திய வல்லரசாகிய ஐக்கிய நாட்டுடன் ஓர் ராணுவ ஒப்பந்தம் செய்துகொள்வதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இம்மாதிரியான ஓர் ஒப்பந்தம் நேர்ந்தால் ஸமீபநாடுகளையும் காலக்ரமத்தில் தங்கள் வலையில் வீழ்த்தவோ, அல்லது தங்கள் கார்யங்களில் இஷ்டமில்லாமல் போனாலும், பங்கெடுத்துக்கொள்ளும்படி செய்யவோ நேரும் என்பது சான் தீர்க்கதர்சிகளின் அபிப்ராயம். இதை மனத்திற்கொண்டுதான் ஜனநாயகத்துறையில் சிறிது, சிறிதாக முன்னேறிக்கொண்டிருக்கும் நாடுகள், உலக வல்லரசுகளுடன் சேராமல் தனித்து நின்று ஸமாதானத்தை நிலை நாட்டவே உதவியளிக்க முடியும். அம்மாதிரி உலகத்தில் பல பாகங்களில் ஸமாதானமே நிலவி நின்றால் நம் முன்னோர்கள் மனோரதித்தபடி ஶாந்தி எக்காலத்திலும், எல்லாவிடங்களிலும் நிலை நிற்கும் என்பதில் ஸந்தேஹமில்லை

* * * * * * *

நம் நாட்டில், விசேஷமாக நாம் வஸிக்கும் தென்னாட்டில் பெருவாரியான ப்ராஹ்மணர்கள் மிகவும் ஏழ்மையான நிலைமையில் உள்ளவர்களே. பகவத்க்ருபாவிசேஷத்தினாலும், நம்முடைய பூர்வஜன்மகர்மவிசேஷத்தினாலும் நாம் உயர்ந்த நிலையை அடைந்தபோதிலும் அதற்கநுகுணமாக நடந்து நம் நிலைமையை அபிவ்ருத்தி செய்துகொள்ள நம்மில் பெரும்பாலோர் யத்தனிக்கவில்லை என்றே தோன்றுகிறது.

ப்ராஹ்மண ஸமூஹத்தின் பொருளாதார நிலைமை

நமக்கென்று ஏற்பட்ட வேஷ, பாஷாதிகளினாலும், நித்ய, நைமித்திக கர்மாநுஷ்டானங்களினாலும் நாம் முன்னேறுவதுடன், பொருளாதாரநிலையையும் சீராக்கிக் கொள்ள முயலவேண்டும்!

'जन्मना ब्राह्मणो ज्ञेयः संस्कारैर्द्विज उच्यते ।
विद्यया याति विप्रत्वं त्रिभिः श्रोत्रिय उच्यते ॥'

(பிறப்பினால் ப்ராஹ்மணன் ஆகிறான். ஜாதகர்ம உபநயனாதிஸம்ஸ்காரங்களினால் த்விஜனாகிறான். வேதாத்யயநத்தினால் விப்ரனென்றும், எல்லாம் சேர்ந்தவன் ச்ரோத்ரியனென்றும் சொல்லப்படுகிறான்.) என்ற ஆப்தவாக்யப்படி ஜந்மத்தினால் நமக்கு ப்ராஹ்மண்யம் ஸித்தித்துவிட்டதை மனத்திற்கொண்டு மற்றைய கர்மாக்களில் பங்கெடுத்துக்கொள்ளாமல் இருந்ததின் விளைவுதான் நமக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள சீர்கேடான நிலை. நம்முடைய தோற்றத்தை நம் ஸமூஹத்திற்கநுகுணமாக அமைத்துக் கொள்வதுடன், நமக்கென்று ஏற்பட்ட நித்ய, நைமித்திக கர்மாநுஷ்டானங்களிலும் நாம் முழுமனத்துடன் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி நாம் செய்வதுடன் நில்லாமல் நம் ஸமூஹத்தின் பொருளாதாரமுன்னேற்றத்திற்கும் முயற்சிக்கவேண்டும். இதற்சாக நாம் நமக்கு விதிக்கப்படாத வ்யாபாரங்களில் ஈடுபட தூண்டப்படுவதாக எண்ணக்கூடாது. நமக்கு ஏற்பட்டுள்ள அனாவச்ய தேவைகளை நாம் குறைத்துக்கொள்வதினாலேயே நாம் ஓர் பெரிய அளவுக்கு முன்னேறமுடியும். நம்மில் ஒரு சில தனிகர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோருமே ஏழைகள். ஆதலால் நம்முடைய தோற்றம், ஆஹாரவகைகள், நம் குடும்பத்தில் வரும் கல்யாணம் முதலிய விசேஷங்கள் இவைகளில் கூடியவரையில் மிதமாகவே செலவு செய்ய வேண்டும். **'शरीरमाद्यं खलु धर्मसाधनम्'** (தர்மத்தைச் செய்யவே சரீரம் முதலில் போஷிக்கத் தகுந்தது) என்றபடி சரீரத்தை காப்பாற்றுவது தர்மமே. ஆனால் காப்பாற்றுவது எப்படி என்பதில் அபிப்ராயபேதம் ஏற்படலாம். நமக்கு அவச்யம் தேவையான பொருள்களுக்கும் நம் அபிலாஷையைப் பூர்த்தியாக்கிக் கொள்ள நாம் விரும்பும் வஸ்துக்களுக்கும் வித்யாஸம் உண்டல்லவா? ஆஹாரம் தேவை. அதற்கு அரிசி தேவையே. ஆஹாரத்திற்கு உபதம்சங்கள் தேவையாகலாம். ஆனால் அவைகளைத் தயாரிக்கும் முறையிலோ இன்ன வஸ்துக்கள் தேவை என்றோ ஒரே மாதிரி கருத்து ஏற்படுமா? அவரவர்கள் நிலைக்கேற்ப, மனோபீஷ்டத்திற்கேற்ப பதிலளிப்பார்கள் எல்லோ

ரும். இம்மாதிரியான அற்பவிஷயங்கள் முதல் ஒவ்வொருவிஷயத்திலும் நாம் நன்கு யோசித்து நம்முடைய செலவு வகைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதுடன் நமக்கு ஏற்பட்ட ஸ்தாவரஸொத்துக்களைக் காக்கவும் நாம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். நாம் செய்யவேண்டியவற்றில் ஒன்றிரண்டு விஷபங்களையே இங்கு குறிப்பிட்டுள்ளோம். எல்லோரும் மற்றவைகளையும் நன்கு பராமர்சித்து நம் ஸமூஹத்தின் அபிவ்ருத்திக்குத் தக்கபடி நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

* * * * * * *

நம் ஸமூஹத்தைப் பற்றி மற்றும் ஓர் விஷயம் இங்கு ப்ரஸ்தாபிக்கவேண்டி வருகிறது. ஸமீபகாலத்தி ல்நமக்குச் சுற்றுப்புறங்களில் நடந்து வரும் சிலவ்யவஹாரங்களைப் பார்த்தால் நம் ஸமூஹத்தை நாம் முயற்சி செய்தே காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்று கூடத்தோன்றுகிறது. தர்மத்திற்கு விரோதிகள் தோன்றுவதுபோல் தர்மத்திற்கு ஆதாரமான நம் ஸமூஹத்திற்கும் விரோதிகள் தோன்றி இருப்பது போல் காணப்படுகிறது. அஹிம்ஸாமுறையே நம்முடைய நடவடிக்கைகளைச் சீர்படுத்திக் கொள்வதினால் நாம் நம் ஸமூஹத்தைக் காக்க முடியும் என்றும் தோன்றுகிறது. கிராமங்களில் உள்ளவர்கள் பொதுவிடங்களில் அடிக்கடி கூடியிருந்து ஸ்நாந, ஸந்த்யாவந்தனாதிகளைச் செய்தும் பகவந்நாம ஸங்கீர்த்தநங்களிலும், ஸ்தோத்ர பாடல்களிலும் பங்கெடுத்துக் கொண்டு பகவத்க்ருபையைப் பெருவதுடன் பார்ப்பவர்கள் மனத்திலும் நம்ஸமூஹத்தைப் பற்றி ஓர் உயர்ந்த அபிப்ராயம் ஏற்படும்படியும் செய்வது மிகவும் நல்லது. உத்ஸவகாலங்களிலும், விசேஷமான காலங்களிலும் நாமெல்லோரும் ஒன்றுகூடி இருந்து நம்முடைய ஒற்றுமையை மற்றவர்களுக்குக்காண்பித்து நம்மிடம் மரியாதையோ, பஹுமானமோ ஏற்படும்படி நாம் உடனேயே செய்யவேண்டும். இவைகள் ஏதோ கட்டுப்பாடுகள் என்று எண்ணாமல் உடனே அவச்யம் செய்யவேண்டிய கடைமைகள் என்று மனத்திற்கொண்டு செய்தால் நாம் ஒரு உயர்ந்த ஸமூஹத்தினராகவாழமுடியும்.

* * * * * * *

ஸ்ரீ. உப. வித்வான், முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியின் மறைவு

ஸ்ரீமதஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை ஆரம்பித்தநாள்முதல் இக்கலாசாலையில் ந்யாயாத்பாபகராயும், உபாத்யக்ஷராகவும் எழுந்தருளியிருந்த வித்வான், ஸ்ரீ. உப. முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி சென்ற 27-12-53 ஞாயிறு பிற்பகல் 3-30 மணிக்கு பரமபதித்த விஷயத்தை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த ஸ்வாமிக்கு வயது 42 தான்.

ஸுமார் 23 வருஷகாலமாக அந்த ஸ்வாமி ஸ்ரீஸந்நிதியின் கைங்கர்யத்திலேயே அந்வயித்திருந்தார். ஸ்ரீமதஹோபில மடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கர்ஸந்நிதியில் தர்க்கஶாஸ்த்ரத்தைநன்குஅப்யஸித்துஅந்தஅழகியசிங்கருக்குப்ரீதிபாத்ரராகவுமிருந்தார். வேதாந்தஶாஸ்த்ரத்தை முறைப்படி ஸ்ரீஅழகியசிங்கர் ஸந்நிதியிலேயே காலக்ஷேபம் செய்திருந்தவளவில் மதுராந்தகத்தில் கலாசாலை ஆரம்பிக்கும் ஸமயம் ப்ரவசன கர்த்தாவாக ஸ்ரீமதழகியசிங்கரால் நியமிக்கப்பட்டு இங்கு எழுந்தருளினார். இங்கு எழுந்தருளியிருந்தகாலத்தில் ஸ்ரீமதழகியசிங்கரின் கலாசாலையில் தனக்கு ஏற்பட்ட கைங்கர்யம் பெரிய பாக்யவசத்தினாலேற்பட்டதாகக் கருதி மிகவும் உத்ஸாஹத்துடன் கார்யங்களை நிர்வஹித்துவந்தார். சில வருஷங்களாக அடியேன் ப்ரதிவாரமும் இரண்டுநாட்களே இங்கு தங்குவதினால் பொதுவாய் மற்ற நாட்களில் எல்லாக்கார்யங்களையும் அந்த ஸ்வாமியே மிகவும் உத்ஸாஹத்துடனும் திறமையுடனும் கவனித்துவந்தார். ஸமீபகாலத்தில் போஜனசாலை நிர்வாஹம் பெரும்பாலும் அந்த ஸ்வாமியின் பொறுப்பிலேயே இருந்துவந்தது. இப்படி இராப்பகலாய் நம் கலாசாலைக்கே உழைத்து வந்த இந்த ஸ்வாமி 'பிறர்க்கே உழைத்து ஏழையானேன்' என்றதுபோல் தன் தேஹ ஆரோக்யத்தையும் கூட கவனியாமல் இருந்துவிட்டதால் நோய்வாய்ப்பட்டு எதிர்பாராமல் பரமபதித்துவிட்டார். அந்த ஸ்வாமி பால்யவயதானபடியால் சிறிய இரு பிள்ளைகளையும், பார்யையையும்

விட்டுச்சென்றார். இங்ஙனே மிகவும் சோகிக்கத் தகுந்ததே. ஸ்ரீமதழகியசிங்கர் ஸந்நிதியில் அந்த ஸ்வாமிக்கு ஏற்பட்டிருந்த அசஞ்சலமான பக்தியின் காரணமாய் ஸ்ரீ அழகியசிங்கரின் வருஷதிருவாராதனத்திற்குள்ளாக இந்த ஸ்வாமியும் ஸ்ரீவைகுண்டத்திற்குச் சென்று ஸ்ரீமதழகியசிங்கரின் திருவடிகளை அங்குமாச்ரயிக்கலானார்.

'जातस्य हि ध्रुवो मृत्युः' என்றபடி உலகில் பிறப்பதும் இறப்பதும் இயற்கையானபோதிலும் பால்யத்தில் பரமபதிப்பதும், சிறுபாலர்கள் முதலியோரை விட்டுச்செல்வதும் மிகவும் துக்கிக்கக்கூடிய விஷயங்களே. பல காலம் நம்முடன் ஸுஹ்ருத்தாகக் கூடவிருந்து கைங்கர்யம் செய்தவருக்கு நாம் செய்யக் கூடிய கைமாறு ஒன்றுமில்லை.

ஈச்சம்பாடி தி. ராமஸ்வாமி,
அத்யக்ஷர்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை,
மதுராந்தகம்.

ஸ்ரீ:

செய்திகள்

திருமங்கைமன்னன் திருநக்ஷத்ரமஹோத்ஸவம், ஸ்ரீரங்கம்.

விஜய ஹூ கார்த்திகை மீ 2உ (17-11-53) செவ்வாய்க்கிழமை முதல் ஸ்ரீரங்கம் தசாவதாரன் ஸந்நிதியில் ஸ்ரீ திருமங்கைமன்னன் திருநக்ஷத்ரமஹோத்ஸவமாரம்பிக்கப்பட்டு சனிக்கிழமை (21-11-53) காலையில் 7-மணிக்கு திருமங்கைமன்னன் புறப்பாடு ஆகி ஸேவை சாற்றுமுறை கோஷ்டி ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி நடந்தது.

இந்த திருநக்ஷத்ரத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (22-11-53) மாலை 4-மணிக்கு ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், தேசிகதர்சனவிஜயத்வஜ, ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி 'நம் திருமங்கை ஆழ்வாரும் அவர்மஹிமையும்' என்பது பற்றி கீழ் உள் திரு வீதி ஸ்ரீ அஹோபிலமடத்தில் மிகவும் நன்றாக உபந்யஸித்தார்.

பக்தகோடிகளெழுந்தருளியிருந்து ஸ்ரீ ஆழ்வாரின் மஹிமையை ச்ரவணம் பண்ணி அநுக்ரஹத்திற்கு பாத்ரர்களானார்கள்.

ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி
அ. நரஸிம்ஹன்,
கௌரவ மானேஜர்.

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரமஹோத்ஸவம்.

ஸ்ரீ அஹோபில மடத்து ஆஸ்தான நிர்வாஹத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்ஸட கோப ஸ்ரீவீரராகவஸடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் அவதார திருநக்ஷத்ரம் 8-12-53ல் ஸ்ரீமடத்து சிஷ்யர்களால் பல விடங்களிலும் கொண்டாடப்பட்டது.

கும்பகோணம்

இங்கர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் காலையில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன், ஸ்ரீமதாதிவண்ஸடகோப யதீந்த்ர மஹாதேசிகன் இவர்களுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்து, கோஷ்டிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் பாதுகாதீர்த்தமும், ப்ரஸாததி விநியோகங்களும் நடைபெற்றன.

இரவு 6-30 முதல் 8-30 வரை ஸ்ரீ. உப. வித்வான்களான, வில்லூர் ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி, சருக்கை நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஒப்பிலியப்பன்ஸந்நிதி நவநீதம் ஸ்ரீ ராமதேசிகாசார்ய ஸ்வாமி, இளையவில்லி தி. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி இவர்கள் முறையே ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்யகுணங்களைத்தாங்களறிந்தவாறேத்தி மகிழ்ந்தார்கள். இளையவில்லிஸ்வாமி பேசியதில் ஸ்ரீ அழகியசிங்கரின் அவதாரத்திருவம்சப் பெருமையை விளக்கும்போது 'மாயன் மணிவண்ணன் தாள்பணியும் மக்களைப்பெறுவர்களே' 'உன்னைக்கண்டார் என்ன நோன்பு நோற்றாள்கொலோ இவனைப் பெற்றவயிறுடையாள்' 'வாய்த்தநன்மக்களைப் பெற்று மகிழ்வரே' 'நல்லபதத்தால் மனைவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே' என்று இவை போல்வன மற்றும் முழங்கிக்கொண்டு நிற்கும் ஆழ்வாராதிகள் பாசுரங்களெல்லாம் கற்றவர்குச் சொல்லியிருக்கும் பெருமைகளில் இம்மஹானின் அவதாரப்பெருமையினாலும் புத்துயிர் பெற்று விளங்குகின்றன என்று தெளிவாக எடுத்துரைத்தவை முக்கியமாகக் குறிக்கொள்ளத்தக்கவை.

ஸ்ரீ அஹோபிலமடம்
கௌரவ செகரெட்டரி.

(தொடரும்)

ஸ்ரீ:

ஆழ்வாராசார்யர்களின் அவதாரம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

தான் பிரிந்துபட்ட வ்யஸனமெல்லாந்தீரவக் களிரோடு இன்பம் எய்தவேணும் என்றல்லவோ பார்க்கிறார். மேலும் தமக்கு அபிமதமாயும் தன்னெஞ்சம் தன்னையுமறியா துவணங்கும்படியாயும் உள்ளவன் பேருளாளன் தான் என்கிறதை இதர திவ்ய தேசங்களில் சென்று அங்கேயிருக்கும் எம்பெருமான்களை மங்களாஶாஸநம் பண்ணும்போதுகூட அருளிச் செய்கிறார். பேருளாளன் பெருமை பேசக்கற்றவராகிய இவர் அவ்வெம்பெருமானின் ஆபிரூப்யத்தில்ஈடுபட்டே பரமபதத்தைக்குறிப்பிலும் கொள்ளாது நின்றார் என்பது கலியனுரை குடிகொண்ட கருத்துடையோனாகிய நம் தூப்புல்பிள்ளை அருளாளனை அநுபவித்து ‘வெகூணவாவொவி ந ஒெ zவிஜாஷஃ’ என்று ஸாதித்ததிலிருந்து நன்கு ஏற்படுகிறது.

தம்முடைய பிறவியை நீக்குவதற்கு அலைகடல் வண்ணர்பால் இவர் ஆசையானது மிகவும் பெரிதாகி நின்று, ‘நந்தாநரகத்து அழுந்தாவகை அந்தோ அடியேற்கு அருளாய் உன்னருளே’ என்றும் ‘வரையுருவின் மாகளிற்றைத் தோழீ என்தன் முலைக்குவட்டில் பூட்டிக்கொண்டு .... எப்பொழுதும் நினைந்துருகியிருப்பன் நானே’ என்றும், ‘நின்னடியிணை பணிவன் வருமிடர்அகல மாற்றோ வினையே’ என்றும் இப்படி பலபடியாகக் கதறினவளவிலும் இவரையிட்டு இன்னும் சிலஅரிய ஶாஸ்த்ரார்த்தங்களை நாட்டுக்கு வெளியிட ஸர்வேச்வரன் திருவுள்ளம்பற்றியிருந்தமையால் முகம் காட்டிற்றிலன். அப்போது ஆசையானது இருந்த விடத்தில் இருக்கவொட்டாதாகையால் ஆழ்வார் கடலன்ன காமத்தராகி மடலூர்ந்தாகிலும் ஸர்வேச்வரனை அடைந்தே தீருவது என்று எண்ணிமடலூர உத்யோகித்தவளவிலே ஸர்வேச்வரன் இனி கால் தாழ்ந்தால் ஆழ்வாரின் ஸத்தைக்கு ஹாநி ஏற்பட்டுவிடுமென்றும் ஆழ்வார் மடலூரத்தொடங்கி விட்டால் ‘தம்மையுகப்பாரைத் தாமுகப்பர்’ என்கிற சொல்லானது பொய்யாகிவிடும் என்றும், தமக்கு அஸாதாரணமாயுள்ள ‘தயையுடையன், சிலமுடையவன்’ என்கிறவ்ருதங்கள் தம்மைவிட்டு ஆழ்வாரைப் பின்பற்றிவிடும் என்றும் எண்ணி உடனே ஆழ்வாருக்கு ஸேவை ஸாதித்து ஆழ்வாரை அவாவற்று வீடு பெறும்படி பண்ணினான். ஸர்வேச்வரனிடத்தில் வாள் வலியால் மந்திரத்தைக் கொண்ட மங்கையர் கோனின் மஹிமையை யாரோ உரைக்கவல்லார்?

ஸ்ரீஸ்வாமி தேசிகன் பரமபதத்திற்கு எழுந்தருளின தினமானது ஒரு கார்த்திகை மாதத்தில் க்ருத்திகா நக்ஷத்திரத்தோடுகூடிய பௌர்ணமி என்று ப்ரஸங்காத் நேயர்களுக்கு ஜ்ஞாபகப்படுத்துகிறோம்.

திருப்பாணாழ்வார்

திருப்பாணாழ்வார் கார்த்திகை மாதத்தில் ரோஹிணித் திருநக்ஷத்திரத்தில் திருவவதரித்தார். இவர் உறையூர் என்னும் க்ஷேத்திரத்தில் அயோநிஜராக செந்நெற் பயிர் கதிரில் திருவவதரித்தார். இவர் பாணகுலத்தில் வளர்ந்து வந்தார். பிறவி முதற் கொண்டே எம்பெருமானின் அநுக்ரஹத்தைப் பெற்று அவனிடம் ஆராத பக்தி பூண்டு அரங்கனை அநவரதமும் யாழைக் கையிலேந்தி கோயிலில் புகாமல் தூர நின்று கொண்டு பாடியவண்ணமே இருப்பார். ஒரு நாள் திருவரங்கச் செல்வனுருக்கு திருமஞ்ஜநம் கொண்டுவரும் லோகசாரங்க மாமுனிவர் ஆற்றங்கரையில் நின்றுகொண்டு தன்னையும் மறந்து பக்தியால் பாடிக்கொண்டிருக்கும் இவ்வாழ்வாரை தூரே போகச் சொல்லியும் ஆழ்வார் தன்னை மறந்திருந்தபடியால் இவர் வார்த்தை காதில் படாது அங்கேயே நின்றுகொண்டிருக்க ஆழ்வார் பேரில் கோபித்து அவரை அடித்து துன்புறுத்தினார். திருவரங்கத்தமுதனார் செங்கோலையுடையவராகையால் அநியாயமாகத்தம்முடைய பக்தன் துன்புறுத்தப்பட்டதை நினைத்து வருந்தி உடனே லோகசார்

ங்க மாமுனி தோள்களிலே ஆழ்வாரை எறியருளப்பண்ணிக் கொண்டு வரும்படி நியமித்தார். ஆழ்வார் வெகுவாக மறுத்தும் எம்பெருமானின் நியமனம் என்றவாறே உத்தரம் சொல்ல விரகில்லாமல் அப்படியேலோகசாரங்க மாமுனி தோள்களிலே எறிக்கொண்டு அரங்க நகரப்பனை அடிபணிந்து நின்றார். பெரிய பெருமாளை ஸேவித்ததும் அவ்வநுபவம் உள்ளடங்காமல் அவ்வெம்பெருமானை பாதாதிகேசம் பாடினார். அந்தப் பாடலே அமலனாதிபிரான் என்னும் ப்ரபந்தமாக அமைந்தது. இது 10 பாசுரங்கள் கொண்டது. மற்றைய ப்ரபந்தங்கள்போல் அந்யாபதேஶம், ஸ்வாபதேஶம், ஸாமாநாதிகரண்ய நிர்ணயம், என்றிவை முதலான க்லேசங்கள் இல்லாமல் வெகு ஸரளமாய பத்துப் பாட்டாய் இது அமைந்திருக்கிறது. இதின் அர்த்தங்களோ பலமறையின் பொருள். பழ மறையின் பொருளும்கூட. இப்ப்ரபந்தம் காண்பனவும்உரைப்பனவும் மற்றொன்றின்றிக் கண்ணனையே ப்ரதிபாதிக்கும். உரைப்பவரோ எம்பெருமானிடம் கடியகாதல் பூண்ட பாண் பெருமாள். இனி ப்ரபந்தத்தின் சீர்மையைச் சொல்லுவானேன். இவ்வளவு எற்றம் இப்ப்ரபந்தத்திற்கு இருக்கிறபடியால்தான் நம் தூப்புல்பிள்ளை இதற்கு ‚முநிவாஹந போகம்' என்று பெயர் பூண்ட ஓர் வ்யாக்யாநம் செய்தருளினார். ‘நம் பாணநாதன்' என்றும் வெகுவாகக் கொண்டாடுகிறார் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன். அரங்கத்தரவணைப் பள்ளியானை அடிபணிந்து அவனடி முதல் முடிவரை அங்க ப்ரத்யங்கமாக அநுபவித்து அவனிடத்தே அழுந்தினார் இவ்வாழ்வார்.

நம்பிள்ளை

இந்த மஹான் கார்த்திகை மாதத்தில் க்ருத்திகா திருநக்ஷத்திரத்தில் திருவவதரித்தார். நம்பூர் என்பது அவதாரஸ்தலம். பகவத் விஷயத்தில் மஹாமேதாவியாய் காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருந்தபடி. இவரிடம்தான் பெரியவாச்சான்பிள்ளையும்வடக்குத்திருவீதிப் பிள்ளையும் காலக்ஷேபம் செய்யும்போது ஸ்ரீ ஸ்வாமி ஸாதிக்கும் அர்த்த விஶேஷங்களை அப்படியே பட்டோலை கொண்டார்கள். அதுவே இப்போது முறையே 24000 படி என்றும் 36000 படி (ஈடு) என்றும் க்ரந்தமாக ப்ரசாரத்திற்கு வந்து காலக்ஷேபம் செய்யப்படுகின்றன. இக்ரந்தங்களை ஸேவிக்கும்போது நம்பிள்ளைக்கு ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளிலுள்ள ஆழ்ந்த அநுபவம் நன்கு எற்படும். ஆழ்வார் பாசுரங்களுக்கு வெகு ரஸமான அர்த்த விசேஷங்கள் இந்த ஸ்வாமியால் அருளப்பட்டன. இந்த மஹோபகாரத்திற்கு நாம் என்றென்றும் இவர் திருவடிகளில் பக்தியைச் செலுத்தக் கடமைப் பட்டவர்களாக விருக்கிறோம்.

(தொடரும்)

देव त्वां शरणं प्रपन्नमपि मां दुःखान्यनन्याश्रयं
बाधन्ते यदि सर्वपापनिवहात् त्वां मोक्षयिष्याम्यहम् ।
इत्युक्तं तव वाक्यमर्थविधुरं जायेत यद्वा भवान्
तत्राशक्त इति प्रथेत हि ततो मां रक्षतु त्वत्क्षमा ॥

ஸ்ரீ:

திருப்பாவைக்கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

'நாம் எல்லோரும் சேர்ந்து எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லிப் பாடுவோம். நாம் இத்தனைபேரும் சேர்ந்து பாடினால் இந்த சப்தம் பெரியதாயிருக்கு மாகையாலே இதனால் அவள் நிச்சயமாக விழித்துக் கொள்வாள். உங்களுக்கு ஸம்மதமானால் பாடுவோம்' என்றாள். இதில் ஒருவரும் ஆக்ஷேபம் செய்யவில்லை யென்பது மட்டுமின்றி எல்லோரும் மிகுந்த உத்ஸாஹம் கொண்டனர். உடனே

'कमलनयन वासुदेव विष्णो
धरणिधराच्युत शङ्खचक्रपाणे'
'श्रीनाथ नारायण वासुदेव
श्रीकृष्ण भक्तप्रिय चक्रपाणे ।
श्रीपद्मनाभाच्युत कैटभारे
श्रीराम पद्माक्ष हरे मुरारे'
'अनन्त वैकुण्ठ मुकुन्द कृष्ण
गोविन्द दामोदर माधवेति'

'என்னப்பா என்னிருடீகேசா
என்னுயிர்க் காவலனே'
'பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா வமரரேறே
ஆயர்தங் கொழுந்தே'

என்றிப்படி கேட்போர் மனது உருகி லயிக்கும்படி வெகு அழகாகப் பாடினார்கள். இப்பாட்டைக்கேட்டு அப்பெண் விழித்திருப்பாள் என்பதில் ப்ரதான கோபகுமாரிக்குச் சிறிதும் ஸந்தேஹமில்லை. ஆகிலுமவள் எழுந்து வரவில்லை யாகையால், விழித்தும் தாம் செய்யும் பகவந்நாம ஸங்கீர்த்தனத்தைக் கேட்டு ரஸித்துக்கொண்டே படுத்திருக்கின்றாள் என நினைத்து நாங்கள் பகவானைப் பாடுவதைக் கேட்டுக் கொண்டே படுத்திருக்கின்றாயோ? அப்படிப்படுத்திருக்கலாமா? எங்களுடன் வந்து கூடி ரஸாநுபவம் செய்யவேண்டாமா? நீ மிகுந்த விவேகமும் ஸாமர்த்யமும் உடையவளாயிற்றே. எங்களை யெல்லாம் திருத்தி முறைப்படி நடக்கச் செய்வதற்குரிய நாயகப் பெண்பிள்ளையாயிற்றே. எழுந்து வா. படுத்திருக்காதே' என்ற கருத்துடன் 'நாயகப்பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியே' என்று சொல்லி யெழுப்பினாள். இப்படிச் சொல்லிக் கொண்டே இவள் அவ்வீட்டின் முன்பக்கத்திலேயே யிருந்த அப்பெண்ணின் படுக்கையறையின் அருகில் சென்றாள். ஜன்னலின் கதவு சிறிது திறந்திருந்தமையால் அவ்வழியாக உள்ளே பார்த்தாள். அப்பொழுது கட்டிலிலிருந்து கீழே இறங்கினாள் அவ்வீட்டுப் பெண். அவ்வழகியின் உருவம் அங்குள்ள விளக்கின் வெளிச்சத்தில் பள பள வென்று ப்ரகாசித்தது. அதைக் கண்டுகந்த நாயகப் பெண் 'ஒளி மிகுந்த உத்தம வடிவு பெற்ற கங்பா மணியே, கதவைத் திற. உடனே எங்களுடன்கூடிக் கலந்து களி' என்று அன்புடன் அழைத்தாள். அவளும் அப்படியே செய்தாள்.

முன் பாட்டில் பகவானை 'வித்து' என்று அநுபவித்தாள். வித்து விதை. இதனால் எம்பெருமானுடைய காரணாவஸ்தை பேசப்பட்டது. இங்கு கார்யாவஸ்தையைப்பேசுகிறாள். எம்பெருமான் உலகத்தை ஸ்ருஷ்டித்து ஒவ்வொரு வஸ்துவிலும் உள்ளே ப்ரவேசித்து அந்தர்யாமியாய் நின்று நியமநம்செய்கின்றான். உலகத்திலுள்ள ஒவ்வொருவஸ்துவிலும் இவன் வ்யாபித்திருக்கின்றான். ஒவ்வொரு வஸ்துவும் இவனிடத்திலேயே இருக்கின்றது. இவ்விரண்டு ஸம்பந்தத்தையும் நாராயண பதம் குறிக்கின்றது. இனி மூர்த்தி என்று ஸ்ரீ க்ருஷ்ணனாக அவதரித்ததைக் குறிப்பிடுகின்றாள். கேசவன் என்றது ப்ருஹ்மாவுக்கும் சிவனுக்கும் காரணனாயிருந்து 'ஸர்வஸ்மாத் பரன் இவன்' என்பதைக் காட்டி அவதார நிலையிலும் பரத்வம் குன்றாமலிருக்கின்றானென்பதை அறிவிக்கின்றது. (இப்படிப் பொருள் கொண்டால் இந்த அவதாரத்தில் செய்த லீலை ஒன்றும் இங்கு கூறப்படாமலே போகின்றதெனக் கருதிய பெரியோர்கள் 'கேசவன் கேசி என்னும் அஸுரனைக் கொன்றவன்' என விவரணம் பண்ணினார்கள்.) இப்படி இங்குக் கோபகுமாரியின் பகவதநுபவம் நடந்தது.

8. கீழ்வானம்

குமாரிகளின் கோஷ்டி புறப்படவேண்டிய ஸமயம். அப்போது அதிலுள்ள பல கன்னிகைகள் நாயகப்பெண்ணைக் கூப்பிட்டு கிழக்கு திக்கைக் காட்டி 'அங்கே பார்' என்றார்கள். அவள் பார்த்தாள். கிழக்கு திசை வெளுக்கும் தருவாயில் இருந்தது. மேய்வதற்காக ஊருக்கு வெளியேயுள்ள புல் தரைகளுக்குப் போவதற்கு முன் அருகிலுள்ள புல்லை மேய்வதற்காக எருமைகளை அவிழ்த்து விடுவது வழக்கம். அப்படி அவிழ்த்து விடப்பட்ட எருமைகள் பல அங்கே போய்க்கொண்டிருந்தன. இவற்றையும் அவர்கள் அவளுக்குக்காட்டினார்கள். 'நாழிகையாகிவிட்டது. இனிச் சிறிதும் தாமதம் செய்யாமல் போகவேண்டு' மென்பது இவர்களுடைய கருத்து. அதை மிகவும் புத்திசாலியான அந்த நாயகப் பெண் தெரிந்து கொண்டாள். 'என்ன செய்வது அம்மா? எல்லாரையும் அழைத்துக்கொண்டு தானே போகவேண்டும். நமது அருமைத் தோழிகளை விட்டுவிட்டு நாம் மாத்திரம் போவது நமக்குத் தகுமா? கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று சாந்தமாகவும் நயமாகவும் சொன்னாள். அதைக் கேட்டபிறகும் சிலர் 'அப்படியாகில் நீ போய் தூங்குகின்றவர்களையெல்லாம் ஒருவர் விடாமல் அழைத்துக்கொண்டு மெதுவாக வா நாங்கள் முன்னாடியே போய் எங்கள் காரியத்தைப் பார்க்கிறோம்' என்றார்கள். 'இப்படி நிர்தாக்ஷிண்யமாகப் பேசக் கூடாதம்மா. இது நமக்குத் தகாது. தயையும் தாக்ஷிண்யமும் வெகுப்ரதானமான குணங்கள். கொஞ்சம் பொருமையும் வேண்டும். எல்லாம் நம் இஷ்டப்படி நடந்துவிடுமா? தனியே போய் சர சரவென்று நொடிப்பொழுதில் எல்லாவற்றையும் முடித்துவிட்டுப்பிறகு நாம் செய்யவேண்டிய காரியம்தான் என்னவிருக்கின்றது. அவரவர்கள் தனித் தனியே செய்வதில் என்ன சிறப்பிருக்கின்றது. உத்ஸாஹமாக எல்லோரும் சேர்ந்து செய்தால் தானே உத்ஸவமாகும். ஆகையால் மனத்தில் துளியும் கலக்கமிராமல் கூடவே நீங்கள் கலந்திருக்கவேண்டும்' தனியே பிரிந்துபோகக் கூடாது. என்றிப்படி வெகு சாதுர்யமாகவும் அவர்கள் மனஸ்ஸில் படும்படியும் கூறினாள். பிறகு அவர்கள் 'நல்லது, அப்படியே செய்கின்றோம்' என்று கூறி நிற்க அப்பெருங் கோஷ்டி அங்கிருந்து புறப்பட்டு மேல் சென்றது. கோஷ்டியில் வந்து கலந்து கொள்ளாமல் இன்னும் வீட்டிலேயே தூங்கிக்கொண்டிருக்கின்றவர்களில் உத்ஸஹாவும் ஒருத்தி. ஆகையால் அவள் வீடு வந்ததும் அதன் எதிரில் கோஷ்டி நின்றது. நாயகப் பெண் வீட்டின் அருகே சென்று நடந்ததையெல்லாம் சொல்லி எழுப்பினாள். 'கிழக்கு வெளுத்தது. பனிப் புல் மேய்வதற்காக அவிழ்த்து விடப்பட்ட எருமைகள் ஸஞ்சரிக்கின்றன. வெகுவாக நம் தோழிகள் யாவரும் இனித் தாமதியாமல் போகவேண்டு மென்று துடித்து நிற்கின்றார்கள். அவர்களையெல்லாம் கெஞ்சி நல்ல வார்த்தை சொல்லிப் போகவொட்டாமல் தடுத்துக் கூடவே அழைத்துக் கொண்டு உன்னைக்கூப்பிடுவதற்காக உன் வீட்டு வாசலில் வந்து நின்றோம். ஒரு குறைவுமில்லாமல் மிகவும் நன்றாக இந் நோன்பைச் செய்து முடிக்கவேண்டு மென்று மிகுந்த உத்ஸாஹம் கொண்டவளாயிற்றே நீ. நேற்றிரவு நாமெல்லோரும் கூடிப் பேசிய பொழுது நீ காட்டிய உத்ஸாஹம் எங்களுக் கெல்லாம் ஊக்கத்தை உண்டாக்கிற்றே. அத்தகைய நீயா இன்னும் படுத்துறங்குவது? நாழி சென்றதையும், இத்தனைப் பெண்களை நிறுத்தி வைப்பதிலுள்ள கஷ்டத்தையும், இது போன்ற தர்ம காரியங்களில் உனக்கு இயற்கையாக உள்ள உறக்கத்தையும் எண்ணி உடனே எழுந்திருந்து வா' என்று தெளிவாகவும் இனிமையாகவும் மொழிந்தாள். ஆனால் அப்போதும் உத்ஸஹா எழுந்துவரவில்லை. அதனால் இவளுக்கு ஒரு ஸந்தேஹம் உண்டாயிற்று. இவர்கள் ஆரம்பித்திருக்கும் நோன்பு காரியம் முழுவதும் க்ருஷ்ணனுடைய உதவியைப் பற்றி நிற்கிறது. 'வேண்டிய உதவியையெல்லாம் செய்வதாகக் க்ருஷ்ணன் வாக்களித்திருப்பது உண்மை. ஆகிலும் அதை நம்பி ஆரம்பிப்பதெப்படி? நேரில் தாக்ஷிண்யத்தினால் செய்கின்றேன் என்று சொல்லி விட்டுப் பிறகு ஒன்றுமே செய்யாமலிருந்து விடலாம். அவன் எத்தனையோ பொய் பேசியிருக்கின்றானென்றும் சூது வாது உள்ளவனென்றும் பலர் பேசுகின்றார்கள். ஆகையால் முன் பின் ஆலோசிக்காமல் அவன் பேச்சை நம்பி பெருங்காரியத்தை ஆரம்பித்துப் பிறகு அவமானப் படுவதைவிட வெறுமனே இருப்பதேமேல்,' என்றிவ்வித எண்ண

முண்டாகி அதனால் தயங்கி உத்ஸஹா எழுந்து வாராமலிருக்கின்றாளோ? என்று ஸந்தேஹித்தாள். அதனால் முன் 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்று பேசினபடியே மறுபடியும் பேசி அவளுக்கு உண்மையை அறிவிக்கக் கருதினாள். 'என் அன்பார்ந்த தோழியான உத்ஸஹாவே, ஸ்ரீக்ருஷ்ணனுடைய பெருமையை, அவன் யார் என்ற உண்மையை, நீயுமா இன்னம் அறியாமலிருக்கின்றாய்? தேவாதி தேவனன்றோ அவன். இந்திரன் சிவன் பிரமன் என்ற தேவர்கள் இருக்கின்றார்களே, அவர்களுக் கெல்லாம் மேல்பட்ட தேவன் இவன். ஆகாசத்திற்கும் பூமிக்குமாக வளர்ந்து மிகப் பெரிய குதிரை வடிவமெடுத்து உலகமெல்லாம் நடு நடுங்கும்படி அட்டஹாஸம் செய்து வந்த கேசி என்னும் அஸுரனை மாள வைத்ததையும், நிகரற்ற பலம் வாய்ந்து வெகு பயங்கரர்களான சாணூரன் முஷ்டிகன் என்ற மல்லர்களோடு நிர்பயமாய் யுத்தம் செய்து அவர்களைக் கொன்றதையும் அறியாதவளா நீ. இவற்றையெல்லாமறிந்தவர்கள் ஸ்ரீக்ருஷ்ணன் தேவாதி தேவனென்பதை யறியாமலிருப்பார்களோ? ஸர்வேச்வரனான இவன் தான் செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றாமலிருப்பானா? ஸத்ய ஸந்தனன்றோ அவன். 'இரண்டு தரம் பேசமாட்டானவன்' என்று அவனே சொல்லியிருப்பதை யறியாதார் உலகத்திலுண்டோ? ஆகவே நாம் போய்ப்பாடினால் அவன் நமக்குப் பறை தருவது நிச்சயம். அப்படிப் பாடிப் பறைகொள்வோம். பறை கொண்டு நோன்பு நூற்று அதனால் நாம் ஸேவிப்பது யாரையென்று எண்ணுகின்றாய்? அவனையே தான். வேண்டிய வஸ்துக்களைக் கொடுத்து நோன்பு நன்றாக நடைபெறச் செய்பவனுமவன் தான். அந்த நோன்புக்கு ஆராத்யனாய் அதனால் திருப்தி யடைகின்றவனான உத்தம தேவனும் அவன் தான். அதன் பலனைத் தருபவனும் அவன்தான். ஆகையால் நாம் விண்ணப்பம் செய்வதை யெல்லாம் 'ஆஹா, அப்படியே' என்று ஆதரவோடு அங்கீகரித்துப் பரிசீலித்து அருள் புரிவான். இதில் சிறிதும் ஸந்தேஹம் கொள்ளாதே. உடனே எழுந்து வா. நாழிகையாகிறது.' என்றாள். கதவு திறந்தது. உத்ஸஹா வெளியே வந்தாள். கோஷ்டியில் சேர்ந்தாள். எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

9. தூமணி

கண்ணைக் கவர்ந்து பார்ப்பவர்களைப் பரவசப் படுத்தும்படி அமைந்த ஒரு பெரிய அத்யத்புத மாளிகை. அதிலுள்ள பெண்ணும் வாராமையாலே பெண்கள் அதன் எதிரில் நின்றார்கள். மாளிகையின் நடுவில் பெரிய வாசற்படி. அதன் கதவு உள்ளே தாளிடப் பட்டிருந்தது. வாசற்படிக்கு இப் பக்கமும் அப்பக்கமும் அகன்றதும் விசாலமுமான அறைகள். அவற்றில் ஒன்றில் எந்த எந்த விதமாக முடியுமோ அப்படியெல்லாம் அலங்காரம் செய்து சுவர்களைச் சுற்றி யெங்கும் கார்த்திகை மாதத்தில் திருக் கார்த்தி தினத்தில் போல் விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டுஎரிந்து கொண்டுருந்தன. சுவரெல்லாம் ரத்நங்கள் இழைத்திருந்தபடியால் அவற்றில் ப்ரதிபலித்துப் பல மடங்கு அதிகமாகக் காணப்பெற்று அறையை ஒரே ஜ்யோதிர்மயமாக்கின. தூப வத்திகளிலிருந்தும் தூபக்கால்களிலிருந்தும் வாஸனைப் புகை கிளம்பி எங்கும் மணங்கமழச் செய்தது. அறையின் வெளிப் பக்கத்து ஜன்னல் கதவுகள் நன்றாகத் திறந்து வைக்கப் பட்டிருந்தபடியால் உள்ளுக்குள் இருந்தவெல்லாம் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு நன்றாய்த் தெரிந்தது. நாயகப் பெண் ஜன்னலின் வழியாய் உள்ளே பார்த்தாள். ஆச்சரியமாய் விளங்கின. அவ்வறையின் நடுவில் ஒரு பக்கத்தில் போடப்பட்ட உத்தமமான கட்டிலின் மேல் வெள்ளை வெளேரென்றிருந்த திண்டு தலையணைகளுடன்கூடியமெத்தையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள் கட்டழகியான அவ் வீட்டுப் பெண். 'தோழி, தோழி, எழுந்திரு. நாழிகையாகிவிட்டது. வீதியில் எல்லோரும் வந்துகாத்துக்கொண்டிருக்கின்றார்கள். தோழி, தோழி, இன்னுமா தூங்குவது, எழுந்திரு, தோழி, தோழி, என்றிப்படி பலவிதமாகப் பல தடவை கூப்பிட்டு எழுப்பினாள் நாயகப் பெண். அப்பெண் அசையவே யில்லை. கண் விழிக்கவே யில்லை.

முன் ராத்திரி கூட்டம் கலந்து வீட்டுக்கு வந்த இப்பெண் மறுநாள் அநுஷ்டிக்கவேண்டிய நோன்பையே நினைத்துக்கொண்டிருந்து தூக்கம் கொள்ளாமலிருந்தாள். அது தவிர ஸ்ரீக்ருஷ்ணன் திருமாளிகைக்குப் போகும் போது எல்லோரும் வீதிவலமாகப் போக வேண்டுமென்றும் அப்போது தோழிகளைத்

தன் வீட்டுக்குள் வருவித்து உபசரித்தபிறகு அவர்களுடன் போகவேண்டுமென்றும் உத்தேசித்து 'எல்லோரையும் அழைத்துக்கொண்டு இவ்வழியாக வரவேண்டு மென்று நான் கேட்டுக்கொண்டதாக நாயகப் பெண்ணிடம் சொல்' என்று ஒரு பெண்ணிடம் சொல்லியனுப்பிவிட்டுப் பின்மாலை தோழிகளையெல்லாம் வரவேற்று உபசரிப்பதற்குரிய ஸகல ஏற்பாடுகளையும் செய்ய முனைந்தாள். ஒரு குப்பை ஒருஅழுக்குயில்லாமல்எங்கும்சுத்திசெய்தாள். ஜன்னல் கதவு, வாசற்படி, சுவர் எல்லாவற்றையும் வேலைக்காரிகளை வைத்துக் கொண்டு பள பள வென்றிருக்கும்படி துடைத்தாள். ஆஸனங்களைத் துடைத்துப் புதிய கவசங்களை தரிப்பித்தாள். வெங்கலம் வெள்ளி தங்கம் இவற்றாலாகிய விளக்குகளைத் துடைத்துத்திரியிட்டு எண்ணைவார்த்து எல்லாப் பக்கங்களிலும் வைத்தாள். ஜன்னல், வாசற்படி, அறையின் மேல் பக்கம், எங்கும் பூ வர்ணக் காயிதம், நவரத்நங்கள், இவற்றாலாகிய ஸரங்களைக் கட்டியும் தொங்கவிட்டும் அலங்கரித்தாள். தந்தங்களால் செய்யப்பட்ட அழகிய பீடங்களின் மேல் கல்லிழைத்த தங்கத் தட்டுகளில் வெற்றிலை, பாக்கு, பலவகைப் பழங்கள், இவற்றை வைத்தாள். இக் காரியமெல்லாம் முடிந்தது. 'படுத்துக்கொள்ளுங்கள். ரொப்ப நாழிகையாகிவிட்டது' என்று சொல்லி வேலைக்காரிகளை அனுப்பிவிட்டு வெளியில் வந்து சந்திரனைப் பார்த்தாள். மூன்று யாமங்கள் கழிந்தது. நாலாம் யாமம் வந்து விட்டதென்பது தெரிந்தது. வெளிவாசற்கதவு அறைக் கதவு இரண்டையும் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்தாள். இனித் தோழிகள் சீக்கிரமே வந்துவிடுவார்கள் என்று எண்ணி விளக்குகளையெல்லாம் தானே ஏற்றினாள். அதன் பிறகு ஸாம்பிராணி வத்திகளைக் கொளுத்தி வைத்தாள். தூபக்கால்களில் தணலிட்டு தசாங்கம் முதலிய வாஸனை வஸ்துக்களைப் போட்டாள். எல்லாம் செய்தாகி விட்டது. இனிச் செய்யவேண்டியது ஒன்றுமில்லை யென்று எண்ணி தனக்குள்ளே ஸந்தோஷப் பட்டாள். கட்டிலின் மேல் உட்கார்ந்தாள். செய்யவேண்டியது வேறொன்று மில்லாமையால் எல்லாம் இருக்க வேண்டியபடி இருக்கின்றதா, ஒழுங்காகவும், அழகாகவும் இருக்கின்றதா என்று நாலாப் பக்கமும் பார்த்தாள். கொட்டாவி வந்தது. நேராக அப்படியே உட்கார்ந்திருப்பது கொஞ்சம் ச்ரமமாகத் தோன்றிற்று. திண்டின் மேல் சிறிது சாய்ந்தாள். இரண்டொரு நிமிஷங்களில் கால்கள் ஸ்வயமே படுக்கையின் மேல் சென்றன. அவைகளை நீட்டி நன்றாகப் படுத்துவிட்டாள். உடனே அயர்ந்த நித்ரை. இவ்வுலகத்தின் சிந்தையே யில்லை. இந்த நிலையில் நாயகப் பெண் அங்கு வந்து அவளை எழுப்பினாள். எவ்வளவு கூப்பிட்டும் பயன்படவில்லை.

விளக்குகள் எரிவதிலிருந்தும் தூபம் கமழ்வதிலிருந்தும் உள்ள நிலை அவளுக்குத் தெளிவாக விளங்கிவிட்டது. சற்றுமுன் வரையில் விழித்திருந்து அப்பொழுதே படுத்துத் தூங்கினாள் என்பது புலப்பட்டது. வெளியிலிருந்து கூப்பிட்டு அவளை எழுப்புவது கூடாதகாரிய மென்பதை உணர்ந்தாள். வீட்டிலுள்ள மற்றவர்களில் யாராவதுவந்துகதவைத் திறக்கட்டும் உள்ளே சென்று எழுப்புவோமென்று கருதி வாசற் கதவினருகே சென்று தட்டினாள். அவ்வீட்டுப் புருஷன் விழித்தெழுந்து கதவைத் திறந்து 'யார், என்ன ஸமாசாரம்' என்று கேட்டார். 'நாங்கள் மார்கழி நோன்பு நூற்கும் பெண்கள். மாமா, உங்கள் பெண்ணையெழுப்பிஅழைத்துக்கொண்டுபோவதற்காக வந்திருக்கின்றோம். வெளியிலிருந்து எழுப்பினோம். அவள் எழுந்திருக்க வில்லை. க்ருபை செய்து அவளை எழுப்பி எங்களுடன் அனுப்பினால் நிரம்ப உபகாரமாயிருக்கும்' என்று நாயகப்பெண் அவருக்கு மறுமொழி கூறினாள். அதைக்கேட்டஅவர் 'நான்விரைந்து செல்ல வேண்டிய காரிய மொன்றிருக்கிறது. இப்பொழுதே வெளியில் செல்லவேண்டும். ஆகையால் நான் செல்லுகின்றேன். நீங்களே எழுப்பி அழைத்துப் போங்கள். இதோ விளக்கைப் பெரிதாக்குகின்றேன். உள்ளே வாருங்கள். இதோ பெண் படுத்திருக்கும் அறையின் வாசற்படி இருக்கின்றது' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றுவிட்டார். விளக்கு வெளிச்சத்தில் அவ்வறைக் கதவின் சீர்மையையும் வேலைப்பாட்டையும் பார்த்து வியந்துநாயகப்பெண் அப்பொழுது அங்குள்ள அந்த நிலைமையை யெல்லாம் குறிப்பிட்டு

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபங்கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்

என்று வாயால் சொல்லி கையால் கதவைத் தட தடவென்று தட்டினாள். (தொடரும்)

ஸ்ரீ:

அன்னமயம்

மனிதனால் உட்கொள்ளப்படும் உணவு வயிற்றின் பசியைப் போக்கவும், நாவின் வேட்கையைத் தணிக்கவும் உபயோகப்படுவதுடன், உடம்பின் உறுப்புக்களுக்கு வேண்டிய போஷணத்தையும் செய்துவருகிறது என்பது உலகப்ரஸித்தம். இவ்விஷயத்தில் ஆராய்ச்சி செய்யும் மேதாவிகளும், உணவின் தாரதம்யங்களைக் கண்டு, உலகத்தினர்களுக்கு புதிய புதிய ஆஹாரவகைகளை சிபார்சு செய்தவண்ணம் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் எல்லோரும், இங்கு முக்யமாய் கவனிக்க வேண்டியதொன்றை மறந்தார்கள் என்றே நாம் நினைக்கிறோம். ஆஹாரத்தின் உபயோகமும், அதனால் ஏற்படும் விளைவுகளும், சரீரத்துடனும், அதன் உறுப்புக்களுடனும் நில்லா. சரீர போஷணம் எத்தகைய அன்னத்தால் உண்டாகும் என்ற ஒரு அம்சம் மட்டில் நமக்கு முக்யம் என்பதல்ல. மனத்தின் எண்ணங்களுக்கும் ஆஹார வகைகளுக்கும் நெருங்கிய உறவு உண்டென்பதும், மனத்தில் தூய எண்ணங்களை விளைவிக்கக்கூடியதும், அதே ஸமயத்தில் சரீரத்தைபோஷித்துவரத்தகுந்ததுமான ஆஹாரமே நமக்குத்தேவை என்பதும்தான் நாம் கவனிக்கவேண்டிய முக்ய விஷயமாகும். இதனால்தான் ஶாஸ்த்ரங்களும், அதறிந்த பெரியோர்களும் புஷ்டியைத்தரும் உணவு பதார்த்தங்களில் வைத்தே சிலவற்றைமட்டில் உபயோகிக்கும்படி நமக்கு உபதேசித்திருப்பது. அவ்வுபதேசப்படி ஸாத்விகமான ஆஹாரங்களினால் சரீரத்தைப் போஷித்து ஆரோக்யம் பெற்ற ஒருவனுக்கும், ஆராய்ச்சியாளர் சொல்படி கண்டவற்றையும் உண்டு கொழுத்த உடலைப்பெற்றமற்றவனுக்கும் மனோபாவம் பற்றியவரையில் திட்டமான மாறுதலைக்காண்பது வெகு எளிது. இப்பொழுது உலகின்கண் நிரம்பியிருப்பவர்கள் பெரும்பாலும் இரண்டாவது வகையில் சேரத் தகுதியுடையவர்களே. அவர்களின் மனோபாவத்தின் விளைவுகளை ஸமாளிப்பதற்காகவே உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசமும் தன்னுடைய ராணுவபலத்தை வ்ருத்திசெய்யவும், நீதிபரிபாலனம், போலீஸ், போன்ற துறைகளை நிர்வஹிக்கவும் முற்படுகிறது. ஸாத்விகாஹார ப்ரியன் ஒருவன் ஓரிடத்திலிருந்தாலே, அதன் காரணமாய், இயற்கையில் பகைமைகொண்ட பசு, புலி போன்ற ப்ராணி இனங்களும்கூட தம்முள் விரோதம் துறந்து கூடிவாழுங்கள் என்ற இவ்வநுபவ உண்மையை 'பாதஞ்சலயோகஸூத்ரம்' 'தத்ஸந்நிதௌ வைரத்யாகஃ' என்று கூறிற்று. ஆஹாரஶுத்தியுள்ளவனின் உள்ளத்தில் எள்ளளவும் ஹிம்ஸாருசி இராதாகையால், அவன் வதியும் தேசமும் அவன் மஹிமைக்கேற்ப அவ்விதமே ஆகிவிடும் என்று குறிப்பு.

மனத்தின் எண்ணங்கள் அவன் உண்ணும் ஆஹாரத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன என்ற உண்மையை 'சாந்தோக்யம்' என்னும் உபநிஷத்து ஒரு கதையின் மூலம் வெளியிடுகிறது. ச்வேதகேது என்பவன் ஒரு ருஷிகுமாரன். தன் தமப்பனாரிடம், ரஹஸ்யார்த்தங்களைக்கேட்டுவருகிறான். அவர் சொன்னார்— அன்னமயம், மனஸ், (ஜலமயம் ப்ராணன். தேஜோமயம் வாக்கு.) மனிதன் உட்செலுத்தும் உணவில் ஜீரணமாகும் தசையில் மூன்று பாகங்கள் உண்டாக்கப்படுகின்றன. அதில் உள்ள ஸ்தூலமான பாகம் மலமாகிக் கழிந்துவிடுகிறது. அடுத்துள்ள ஸூக்ஷ்மபாகம் மாம்ஸம் ஆகும். அதிலும் மிக ஸூக்ஷ்மபாகம் மனத்தை அடைந்து அதை போஷிக்கும். மனது விஷயங்களை எண்ணத்துவங்கும் பொழுது அதற்கு உதவிகரமாய் இருக்கும். இப்படி அவர் உபதேசித்துவரும்பொழுது, சிஷ்யனாகிய குமாரனுக்கு மனத்தில் இவ்விஷயம் நன்கு பதியவில்லை. ஒரு உதாஹரணம் சொல்ல

வேண்டினான். அப்படியே சொல்வதாய் ஒப்புக்கொண்டு, அவனுக்குக் கடியதொரு கட்டளையைப் பிறப்பித்தார். 15 நாட்கள் பட்டினி கிடக்கவும், ஆனால் இஷ்டம்போல் அவ்வப்பொழுது நீர்மட்டில் பருகவும் நியமித்தார். 15 நாட்கள் கழிந்து அவன் அவரிடம் வந்து 'நான் என்ன சொல்ல' என்று கேட்டான். 'ரிக், யஜுஸ், ஸாம வேதங்களை சொல்லிப் போரு' என்றார். கணம் யோசித்தான். 'என் மனத்திற்கு அவைகள் எட்டவில்லை என்றான். அவர் தன் கட்டளையைத் தளர்த்தி 15 நாட்கள் க்ரமமாய் உண்டு 'பிறகு வா' என்று அவனையனுப்பிவைத்தார். அப்படியே செய்து அவன், அதன் முடிவில் வந்து நின்றான். இப்பொழுது கேட்டதை எல்லாம் மனத்தால் நினைத்துச் சொல்லமுடிந்தது அவனுக்கு. இங்கு குரு விளங்கும்படி நடந்ததை எடுத்துரைக்கிறார். ஒவ்வொரு மனிதனுடைய மனதும் 16 அம்சங்கள் கொண்டது. 15 நாட்கள் நீ அன்னமின்றி இருந்தாய். அதனால் மனத்தின் 15 அம்சங்கள் மறைந்துவிட்டன. ஒரு அம்சம் மிச்சமாகியிருந்தும், சிறிய தீப்பொறி ஒன்று, பெரும் சட்டைகளை தஹிக்கவல்லதாகாதது போல், விஷயங்களை நினைக்கவும் மனத்தினால் கூடாமற்போய்விட்டது. சிறிய தீப்பொறியே சருகுகளால் மூடப்பெற்று பெரியதாகி கட்டைகளை தஹிக்க வற்றுமாப்போல், பிறகு 15 நாட்களில் உண்ட உணவினால், மனது இழந்த அம்சங்களை மீண்டும் பெற்று, தன் தொழிலைச் செய்யமுடிந்தது. 'அன்னமயம் மனஸ்' என்று முன் கூறினேனல்லவா. நீ அன்னமின்றி இருந்த பொழுதும் நீர் அருந்தி வந்ததால், ஜலமயமாகிய ப்ராணன் நலிவுறவில்லை. என்று உபதேசத்தை முடித்தார் என்கிறது உபநிஷத்து.

மனிதன் மோக்ஷஸுகத்தைப் பெறவேண்டியதற்கான வழி, நமது ஆஹாரசுத்தியில் துடங்குகிறதாம். ஆஹாரம் பரிசுத்தமானதாயிருந்தால், அதை உபயோகிப்பவனுடைய எண்ணம் தூயதாய் இருக்கும். இடைவீடின்றி பகவானை த்யானிக்க விழைவான். அத்தகைய த்யானத்தினால் இடையூறுகிய பாபச்சுமைகள் கழியப்பெற்று மோக்ஷ மஹாநந்தத்தை அடைவான் என்று வேறொரு இடத்தில் உபநிஷத்துச் சொல்லும். இவ்வர்த்தம் தன்னையே எதிர்மறையால் மனு கூறுகிறார். 'ஆலஸ்யாத் அந்நதோஷாச்ச ம்ருத்யுர்விப்ராந் ஜிகாம்ஸதி' ப்ராஹ்மணர்களை ஸம்ஸாரம் பற்றிக்கொண்டு விடாது பிடிப்பது, அவர்களுடைய ஆஹார தோஷத்தாலும், செய்யவேண்டுவனவாய் சாஸ்த்ரங்களில் ஓதப்பட்டவைகளை செய்யாதொழிவதாலுமாம், என்றவாறு. இம்மாதிரி மனோபாவம் மாறுபடுவதனால்தான் ஸாத்விகர்கள் விரும்பிப்போரும் பல விஷயங்கள், கலிபுருஷர் போன்ற பிறருக்கு வெறுக்கத்தக்கனவாய் உள்ளன. ஸுமார் 50 வருஷங்களுக்கு முன் வரையில்கூட ஆஹாரவிஷயத்தில் பெரும்பாலும் எல்லோராலும் தக்க கவனம் செலுத்தப் பட்டுவந்தது. அடிக்கடி வெளியூர் ப்ரயாணம் செய்யவேண்டிய பெரிய அதிகாரிகளும் தம்முடைய மதத்தைச் சேர்ந்த பரிசாரகர்களை உடன் அழைத்துச்சென்று, அவர்கள் தயாரித்த ஆஹாரங்களை தனித்திருந்து உட்கொண்டு வெளியூர்களில் தமது அலுவல்களை கவனித்து வந்தார்கள் என்று பலர் கூறவும் கேட்டு இருக்கிறோம். 'இன்னார் சமைத்தது' 'இன்ன பொருளால் ஆக்கப்பட்டது' என்றுகூட தெரிந்துக் கொள்ளாமல், கண்டவருடன் கூடிக்குதூஹலித்து, உணவு அருந்துவதைவிட, கூழையாயினும் கஞ்சியையாயினும் மனைவி முதலிய பரிவு உள்ள பேர்களால் பாகம் செய்யப்பட்டதை, பரிசுத்தமானதை, 'உன் பொன்னடி வாழ்க' வென்று பெருமாளைக் கண்டருளும்படி இறைஞ்சி, வாழ்த்தி, நியமங்களுடன் உட்கொண்டு வருவதே, சாலச் சிறந்தது என பெரியோர்கள் கண்டறிந்த பேருண்மை.

ப்ரஹ்ம ஸூத்ரத்தில் இந்த ஆஹாரநியமம் பற்றி ஒரு சர்ச்சை செய்து முடிவு கூறப்பட்டுள்ளது. பெருமை, பதவி முதலிய சில்வான பலன்களைப்பெற விரும்புவோருக்கு 'ப்ராணவித்யை' என்னப்பட்ட ஒரு த்யாந வழி சில உபநிஷத்துக்களில் கூறப்பட்டுள்ளது. அதன் பயன் கூறுமிடத்தில் மேற்சொன்ன பலன்களுடன் ஒரு புதிய பலனும் குறிப்பி

டப்பட்டுள்ளது. 'இப் ப்ராணவித்யையைச் செய்துவருபவனுக்கு உலகில் எங்கும் உண்ணத் தகாத உணவுகிடையாது' என்பதுதான் அது. 'அவன் எங்கும் எதையும் உண்ணலாம். அதனால் எவ்விதபாபமும் உதியாது' என்று தேறுகிறது. என்றிவ்வாராக மேல்தோன்றலான அவ்வாக்யத்தின் பொருளைக் கொண்டு சிலர் ஆக்ஷேபம் செய்தனர். இதற்குச் சுருக்கமான ஸமாதானம் வருமாறு—'ப்ராணவித்யை' என்பது ஒரு சிறிய பலத்தைக் கோரிச்செய்யப்படும் 'காம்ய வித்யை' வகையில் சேர்ந்தது. மோக்ஷத்தை உத்தேசித்து அநுஷ்டிக்கப்பட்டு வரும் 'ப்ரஹ்மவித்யை' என்னும் பசவத்த்யாநம் இதனினும் மேம்பட்டது. அந்த உயர்ந்த வித்யையைச் செய்துவரும் உத்தம அதிகாரிகளை கடுமையான ஆஹாரநியமங்களைப் பின்பற்றிவரும் பொழுது, தாழ்ந்த நிலையிலுள்ள 'ப்ராணவித்யாதிகாரிக்கு' எங்கும் எதையும் உண்ணலாம்' என்ற சலுகை கொடுக்கப்பட்டதற்குத் தகுந்த வ்யாக்யாநம் கூறல் வேண்டும். 'ப்ராணஸங்கடம் நேர்ந்த பொழுது அவன் எங்கும் எதையும் உண்ணலாம்' என்பதுதான் அவ்வ்யாக்யாநம். அன்னமின்றி அவன் ப்ராணன் நலிவுறும் என்ற ஸங்கட நிலை நேர்ந்தபொழுது அந்நிலையினின்றும் மீள்வதற்குமட்டில் அவன் எந்த உணவையும் உண்ணலாம். ப்ரஹ்மவித்யையைச் செய்துவரும் ஒரு உத்தம அதிகாரியின் உதாஹரணமிங்கு கதைமூலம் காட்டப்படுகிறது. உஷஸ்தி என்ற ஒரு ருஷி குருக்ஷேத்ரத்தில் இருந்தார். அக்காலத்தில் கல்மாரிபொழிந்து அத்தேசமே பாழடைந்தது. பஞ்சம் மிகுந்த அந்த தருணத்தில் ஒரு அரசன் செய்யும் யாகத்தில் தக்ஷிணை பெற்று ஜீவிக்க நினைத்த அவர், சிறிய வயதினளான தன் பத்நியுடன் புறப்பட்டு நடந்துபோனார். நடுவில், நீண்ட நாள் ஆஹாரமில்லாமையால் ப்ராணஸம்சயதசையையடைந்தார். தெய்வச் செயலாய் அருகில் கொள்ளை எச்சில் செய்து தின்றுக்கொண்டு இருந்த ஒரு யானைப்பாகனைக்கண்டார். கேட்டார். அவன் 'இது எச்சில்' என்றான். அவர் ஒத்துக்கொள்ள அவன் கொடுக்க, அவர் பசிதீர்ந்தது. பிறகு ஒரு சோதனையே நடந்து விட்டதங்கு என்னலாம். எச்சில் தண்ணீரை கையில் கொடுத்து பருகவேண்டினான் யானைப்பாகன். ருஷி மறுத்தார். காரணத்தை விளக்கினார். 'உன் எச்சில் கொள்ளை வாங்கி நான் உண்டிடாத பொழுது, உன் எச்சில் தண்ணீரை வேண்டாமென்பதற்குக்கூட என்னைக் கிடையாது போயிருக்கக் கூடும். என் ப்ராணன் நிலைபெறுவதற்கு இன்றியமையாத வரையில் உன்னிடமிருந்து நான் பெற்றுக்கொண்டேன். உன் எச்சில் தண்ணீர் இன்றியும் என் ப்ராணன் அமையக் கூடுமாகையால், இத்தண்ணீரை எற்றுக் கொள்ளமுடியாது எனக்கூறி முடித்தார். இதனால் எத்தனையேனும் உயர்ந்த அதிகாரியாயினும் ஆஹாரசுத்தியை கவனிக்கவேண்டும் என்று தேறின பொழுது மற்றுள்ள அதிகாரிகள் திறத்தில் கூறவேண்டியதொன்றுமில்லை. இவ்வித ஆக்ஷேப ஸமாதானங்கள் ப்ரமாண வசனங்களில் கூறப்பட்டுள்ள அதிகாரி விஷயத்தில்தான் செய்து முடிக்கப் பெற்றுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

இனி ஆஹாரசுத்தி என்பது என்ன? அசுத்தியின் இல்லாமையாகில், அந்த அசுத்தி என்பதுதான் எத்தகையது? என்ற கேள்விக்கு பதில் சிறிது கூறி இதை முடித்து விடுவோம். 'ஜாத்யாஶ்ரயநிமித்ததுஷ்டாதந்நாத்காயஸம்ஶுத்தி:' என்ற பூர்வாசார்ய வாக்யம் இங்கு விவரிக்கத் தக்கது. ஜாதி துஷ்டம்– சிலவற்றிற்கு 'அந்த இனத்தைச் சேர்ந்தது இது என்பதினாலேயே அசுத்தி (தோஷம்) உண்டு. பூண்டு முதலியவைகளை, அந்த இனம் என்பதற்காகவே தள்ளிவிடவேண்டும். ஆஶ்ரயதுஷ்டம்– இங்கு ஆஶ்ரயம் என்னப்பட்டவன், அந்த வஸ்துவை உடையவன். அவன் பதிதனாகவோ, சண்டாளனாகவோ, இருந்திடில் அவன் உடைமையாகிய வஸ்து நல்ல இனத்தைச் சேர்ந்ததாக இருப்பினும் தள்ளிவிடத் தக்கது. நிமித்த துஷ்டம்– நல்ல இனத்தைச் சார்ந்ததும், நல்ல யஜமானனைக் கொண்டதுமாக விருப்பினும், அவ்வளவுப் பொருள், மயிர், புழு முதலிய நிமித்தங்களோடு ஸம்பந்தப் பட்டிருந்தால் அதுவும் கொள்ளத் தக்கதன்று. இவ்வித

ஸ்ரீ:

கலியன் கண்ட கடன்மல்லைக் கண்ணன்

உலகத்திலுள்ள ஸகல சேதனர்களும் ஸேவித்து அறிந்து, ஆடிப்பாடிக் களித்து அழிவில் இன்பத்தைக் குறைவற அநுபவிப்பதற்கேதான் உலகத்திலுள்ள அநேக கோயில்களும் அவற்றில் பரம்பொருளின் மூர்த்திகளும் விளங்குகின்றன. ஆனால் அதை அனைவரும் உள்ளபடி யறிந்து அனுபவித்து, அந்தமில் பேறின்பத்தை அடைகிறார்களா? அஃதெப்படி முடியும்? பரமனான யெம்பனிமுகில் வண்ணன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் தனி ருசியையும், தனித்தனி போக்கையும், அவரவர்களுடைய பாப புண்ணியங்களுக்குத் தகுந்தாற்போல் அருளியிருக்கிறான். ஸாமான்ய பக்தனொருவன் கோயிலுக்குச் சென்றால் வணங்குகிறான் வலம் வருகிறான் எதோ கொஞ்சம் தோத்திரம் செய்கிறான் திரும்பி வருகிறான். அவ்வவ்வேளைகளில் அவனுக்குச் சிந்தை எங்கெங்கு போகுமோ? ஆதலால் கோயிலுக்குள் இருக்கையில் அவனுடையசிந்தனை தன்னிடத்தில் இருக்கும்படி பகவான் தானே யருள் செய்தால்தான் முடியும். சிலர் கூடியவரையில் பக்தியுடன் தொழுது வலம் வந்து அவன் புகழ்பாடித்திரும்புகிறார். மற்றும் சிலர் கோயிலுக்குப் போய் தொழுவதை யோர் கடனாக நினைக்கிறார்கள். ஆனால் இவர்கள் ஒவ்வொருவரையும் பகவான் அனுக்ரஹிக்காமல் விடுவதில்லை. சிலருக்குச் சீக்கிரத்திலும் மற்றுஞ்சிலருக்குத் தாமதத்திலும் ஆகும். நிற்க, பக்திப்பெருஞ் செல்வத்தில் மூழ்கித்திளைக்கும் லோகோபகாரிகளான ஆழ்வார்களுக்கும் அவர்கள்போன்ற ஆசார்யர்களுக்கும் மூலமாயமுதல்வன் தானேநேரில் வந்து அவர்களது திருவாக்கிலும் கண்களிலும் நெஞ்சிலும் புகுந்து தனதுபல்வேறு லீலாவிநோதங்களையும், அவதாரவிசேஷங்களையும் தானேயவர்களுக்குக்காட்டி அவர்களைப்பாடச்செய்தும் அடிமைகொண்டும் மகிழ்கிறான். அம் மெய்ஞ்ஞானியர்களும் அத்தனிமுதல்வனது வடிவழகிலும், திவ்யகுணங்களிலும், திவ்யசக்தியிலும், தமது மனம் முதலியவைகளைப் பறிகொடுத்து அதிலேயே ஆழங்கால்பட்டு கரையேற வழியறியாது மாயனுக்கு அடிமைப்பட்டு வாழ்கிறார்கள். அனைத்தும் அவன் திருவிளையாடல்.

மேலே குறிப்பிடப்பட்டபடி எம்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திவ்ய க்ஷேத்திரங்களில் திருக்கடன்மல்லை யென்ற ஸ்தலமும் ஒன்றாகும். இஃது தொண்டைமண்டலத்தின்கண்ணே கடற்கரையில் உள்ளது. இங்கே கோயில் கொண்டெழுந்தருளி யிருப்பவர் தலசயனத்துறைவார் எனப்படுவர். பல்லவர்கள் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டகாலத்தில் இவ்வூர் சிறந்த துறைமுகமாகவும் இருந்ததாகத் தெரிகிறது. திருமங்கையாழ்வாரும் அப்படியே கூறியிருக்

அசுத்தி அற்ற அன்னத்தால் ஶரீரத்தைப் போஷித்து மனத்தையும் காப்பாற்றிவரவேண்டும்.

இங்ஙனம் அன்னம் தயாரிக்கப்படும் பொழுது பரிசுத்தமாய் இருப்பது தவிர, தயாரித்த பிறகு நாம் சில செய்து அன்னத்தை மேலும் பரிசுத்தமாக்கவேணும். அவையாவன பகவானுக்கு நிவேதனம் செய்வது, வைச்வதேவம், பலிஹரணம், தேவயஜ்ஞம் முதலிய ஐந்து யஜ்ஞங்கள் (பஞ்ச மஹாயஜ்ஞா:) செய்வது முதலியன. இவ்விதமாகவே நமது முன்னோர்கள் வெகு காலமாய் ஒழுகி வந்து மனத்தூய்மையுடன் ஶரீராரோக்யமும் பெற்று, கோர்ட்டு முதலிய வ்யவஹாரஸ்தலங்களை காலாலும் மிதியாதவர்களாய், வைத்யர்களுக்கு ஒரு காலணாவும் கொடுத்தறியாதவர்களாய் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் ஸந்ததியில் தோன்றிய இன்றய உலகம் இருக்கும்நிலை அந்தோ! சொல்லத்தரமன்று. இன்னாள் அன்னாள் ஆகும் நன்னாள் என்னாளோ? ஸர்வஜ்ஞனே அறிவான்.

கிறார். தனது கவித்திறத்தினாலும் அருள்வாக்கினாலும் நாலுகவிப்பெருமாள் என்ற விருதை யனைவரும் ஒத, எம்பெருமான் கோயில் கொண்ட பலஸ்தலங்களையும் தரிசித்துஉலகுய்வதற்குப் பாமாலைபாடிமகிழ்ந்துவரும் ஜ்ஞானியர் தலைவனாகிய திருமங்கைமன்னன் திருக்கடன்மல்லைக்கு எழுந்தருளுகிறார். அவ்வைணவர்தலைவன் கண்டார் எம்பெருமானை. எம்பிரான் அவர்கண்களுக்குப் பேசாத விக்ரஹமாகத்தோன்றவில்லை. பகவான்தான் இப்படிப்பட்ட பரமபக்தனைக் கண்டால் பேசாமலும் அசையாமலும் படுத்திருப்பானோ? அர்ச்சாவதார எல்லையைக் கடந்தான். அம்மட்டோடு நிற்கவில்லை. தான் விபவாவதாரங்களில்புரிந்த லீலைகளையப்பொழுதேஅந்த மஹாபாகவதோத்தமனுக்குக் காண்பிக்கிறார். ஆழ்வாரது கண்ணையிடங்கொண்ட கண்ணன். மனத்தையும் இடங்கொண்டான். பகவதனுபவம் உள்ளடங்காமல் மனமுருகிப் பாடல்களாக அமுதினுமினியவையாக வெளிவர அதனால் வாயுமிடங் கொண்டான் வாமனன்.

ஆழ்வாரது திருக்கண்களுக்கிலக்காகிப் பகவான் தோன்றினவுடனே தனது மெய்யடியாருடைய திறத்தில் சற்றுங் கள்ளங்கபடமற்ற குழந்தைத்தன்மையுள்ள எம்பெருமானது வசீகாத்தன்மையை வியந்துவக்கிறார். அவ்வளவிலே க்ருஷ்ணவதாரத்தின் பால்யலீலைகள் ஆழ்வாருக்குத் தோன்றுகின்றன. அப்பருவத்திலும் துஷ்டநிக்ரஹம் செய்யும் தன்மையை விளக்கும் பூதனைவதம் தோன்ற '.பேய்த்தாயை ... ... தன்னை' என்கிறார் கலியன். தன்னைக் கொல்லவந்த பேயை, அவள் தான் தாயாக நடித்துவந்த முலைவழியே உண்டவன். பிள்ளையென்பது சிறந்தோன். பேயாகவிருப்பினும் தாயுருக்கொண்டு வந்தபடியினாலும், தனது திருமேனியைத் தீண்டும் பாக்கியம் பெற்றிருந்தபடியாலும் அவளையும் உண்டு தம் வயிற்றில் கொண்டு பேய்க்கும் தாயாக ஆயினான். ஸகல உயிர்களுக்கும் தாய், தனயன் முதலிய ஸர்வவிதபந்துவும் தானான ஸர்வேச்வரன் பேயின் முலையுண்ணும்போது தனயனைப்போலிருந்து பின் அவளையுமுண்டு அவளைத் தம் வயிற்றில் கொண்டு அவளுக்கும் தாயாகினான்.

இப்படி யநுபவிக்கும்போது பகவான் தனது கம்பீரமானதும் கட்டுக்கடங்காததுமான அழகிய திருக்கோலத்தைக் காட்ட, 'பிணை மருப்பில் கருங்களிற்றை' என்கிறார் கலியன். தமக்குள் ஒன்றுக்கொன்று நிகர்த்த இரண்டு தந்தங்களையுடைய பெரிய ஆண்யானையையொத்தவன் என்றும் தன்னுடன் சேர்ந்த தங்களில்லாத கரிய பெரிய யானையையொத்தவன் என்றும் இவ்விருவிதமாகவும் பொருள் படும்படி பாடிய சாதுரியம் தான் என்னே!

இப்படிப் பாடுவதைக் கேட்ட பகவான், தான் பெரிய மதயானையாக இருப்பதாகத் திருமங்கையாழ்வார் கூறினால் பிறகு தன்னைச் சேவிக்க வருகிறவர்கள் கிட்டுவதற்கஞ்சி ஒடுவார்களேயென்று நினைத்து ஸௌலப்யத்தின் பரமோச்சாயதசையைக் காட்டுகிற தனது நவநீதசௌர்யத்தைக் காட்டுகிறார். அதைக் கண்ட ஆழ்வார் பெண்மானினதுபோன்றகண்களையுடைய ஆய்ச்சியருடைய வீட்டிலுள்ள தயிர் வெண்ணெய்க்காகத் தான் திருவாய்ப் பாடியில் வந்தமர்ந்தமையும், தான் ஸர்வ தேவாதிதேவனாகவிருப்பினும் தன்னிடத்தில் உள்ளன்புபூண்ட ஆய்ச்சியர்களுடைய கண்ணுக்கிற்குக்கட்டுப்பட்டு அவர்களுடைய கண்ணுக்குப் பெருவிருந்தாக நின்ற தன்மையும், கண்ணன் தங்களது தயிர்வெண்ணெயைக் களவாடுவதைக்கூட மிகமிக ஆனந்தமாகஸேவித்தநுபவிக்கும் ஆய்ச்சியர் தன்மையும், அவ்வாய்ச்சியர் எல்லோரும் கண்ணனைத் தங்கள் புத்திரனெனவே மதிக்கும்படி காட்டித்தந்த பெருவள்ளல் என்பதும் தோன்ற 'பிணைமான் நோக்கில் ஆய்த்தாயர் தயிர் வெண்ணெய் அமர்ந்த கோவை' என்று பாடுகிறார்.

ஆனால் மற்றை யோகியர்க்கும் ஜ்ஞானியர்க்கும் இவனிடம் பற்றில்லையோவென எவருக்கேனும் ஐயமுண்டாகிவிட்டால் என்ன செய்வதென்பதை அந்த க்ஷணத்திலேயே நினைத்த ஆழ்வாருக்கு வ்யாஸர், பராஸர், நாரதர் முதலிய முனிவர்களும், முதலாழ்வார்கள் நம்மாழ்வார் முதலிய கருணையிற்சிறந்த மஹான்களும்

அருகில் நின்று துதித்து வணங்கி மகிழ்வதையும் தாமும் அவர்களுடன் ஆநந்தத்துடன் குலவுவதையும் காட்டுகிறார் பகவான். அதை ஸேவித்த கலியன் 'அந்தணர் தமமுதத்தை' என்கிறார். தங்களுடைய நித்யதர்மாநுஷ்டாநம், ஜ்ஞாநம், பக்தி, யோகம், தர்மம் முதலியவற்றாலெவ்வுயிர்களையும்நன்மையெய்துமாறு செய்யும் தன்மையுள்ளவர்களான அந்தணர்களுக்கு அமுதம்போல் இம்மை மறுமையென்றிரண்டிலும் அநுபவிக்கத்தக்கவனல்லவா?

கலியன் பாடுவதைக்கேட்ட சிலர் 'ஏதேது இவ்வெம்பெருமான் முனிவர்களுக்கும் அந்தணர்களுக்குந்தான் கிட்டிச்சென்று அநுபவிக்கத்தக்கவன்; மற்றையார்கள் நெருங்கவுங்கூடுமோவென்று ஶங்கிக்க, அதையறிந்த ஆழ்வாருக்கு பகவான், தன்னையே முற்றும் விரும்பித் தவங்கிடந்து அணுகிய ஆயர் சிறுமியருடன் யமுனாநதிக்கரையில் ராஸக்கிரீடை முதலியன செய்து மிக மகிழ்ச்சியூட்டியமையைக் காட்டியருள, அதையப்படியே ஸேவித்த ஆழ்வார் 'குரவை முன்னே கோத்தானை' என்கிறார்.

ஆனால் தன்னை நெருங்கியடைந்தோர்க்கு இன்பத்திற்குக் குறையில்லை, மற்றையோருக்கு ஏது இன்பம் என்று சிலர் ஶங்கிப்பதாக அறிந்த ஆழ்வாருக்கு எம்பெருமான் தான் க்ருஷ்ணாவதாரத்தில் தலையிலும் தோள்களிலும், கைகளிலும் பல குடங்களைக்கொண்டு பார்த்தோர் யாவரும் ஆனந்திக்கும் வண்ணம் ஆடிய குடக்கூத்தைக் காட்டியருள, அதைக் கண்ட ஆழ்வார் 'குடமாடு கூத்தன் தன்னை' என்கிறார்.

ஆயினும் அக்கண்ணன் தமது லீலார்த்தமாக ஏதேனும் செய்யலாமாயினும் மற்றவர்களுக்கு ப்ரயோஜனமாய் ஏதேனும் செய்துளனோவென்று எவரேனும் ஸந்தேஹங்கொண்டால் என் செய்வது என்று யோசித்த ஆழ்வாருக்குப் பரமபுருஷன் தன்னைக் காத்துக்கொள்ள வசையறியாதவைகளும் காப்பாற்ற வேண்டுமென்று பிறரை யணுகிக் கேட்கவும் தெரியாத பசுக்கூட்டங்களை அவைகள் சிறிதும் வருந்தாதபடி குன்றைக் கையிலேந்திக் காத்த தன்மையையும், தன்னையடைந்த அரசகுலங்களையும் வருந்தாமல் காத்தமையையும் காட்ட ஆழ்வார் 'கோகுலங்கள் தளராமல் குன்றமேந்திக் காத்தானை' என்கிறார்.

இவை யனைத்தையும் கூறிவிட்டு இப்படிப்பட்ட பெருமைகளை யுடையவர் யாரென்று நினைத்தீர்கள்? அவன்தான் 'எம்மான்' என்று சொல்லுகிறார். இப்படிப்பட்டவனைத் தனக்குரியத் தலைவனாகப் பெற்ற பெருமையும் மிடுக்கும் தோற்றக் கூறுகிறார் கலியன். அன்றியும்மேற் குறித்த பெரியோனை வாஸனையும் காவலும் மிகுந்த சோலைகள் நாற்புறமும் சூழ்ந்த திருக்கடன்மல்லைத் தலசயனத்திலே கண்ணாரக்கண்டு அவனையே தனது தலைவனாகவும் அடைந்தேன் என்கிறார் அந்த நாலுகவிப் பெருமாள். இனி அந்தப் பாடலை முழுமையும் இங்கே தருவோம்—

"பேய்த் தாயை முலையுண்ட பிள்ளைதன்னைப்
பிணைமருப்பில் கருங்களிற்றைப் பிணைமான்-
-நோக்கில்
ஆய்த்தாயர் தயிர் வெண்ணே யமர்ந்தகோவை
அந்தணர்தம் அமுதத்தைக் குரவை முன்னே
கோத்தானை, குடமாடு கூத்தன் தன்னைக்
கோகுலங்கள் தளராமல் குன்றமேந்திக்-
-காத்தானை, எம்மானைக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடன்மல்லைத் தலசயனத்தே'

குறிப்பு—பேய்த்தாய்-பேயாகியதாய், பேய்க்குத்தாய், பிள்ளை-தலைவன், குழந்தை, பிணை-சேர்ந்த, நிகர்த்த, நோக்கில்-பார்வையில், பார்வையையுடைய, மருப்பில்- மருப்பென்று பெயருடைய தந்தத்தையுடைய, தந்தமில்லாத, தாயர்- தாய்மார், தயிர் வெண்ணே யமர்ந்த- தயிருக்காகவும் வெண்ணெய்க்காகவும் அமர்ந்த, தயிர் வெண்ணெய் முதலியவற்றை உண்டு அமர்ந்த; கோ- தலைவன்— அரசன் - வள்ளல், குரவை- ராஸக்ரீடை, கோ குலம்— பசுநிரை, அரசர் கூட்டம், கடி- வாஸனை, காவல்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

7-10-53 இரவு ராமாபுரத்திலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள மாஸாப்பேட்டை(ராயச்சுட்டிக்கு ஸமீபம்) யிலுள்ள ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோயிலுக்கெழுந்தருளினர். அங்கிருந்து புறப்பட்டு அன்றிரவே 15மைல் தூரத்திலுள்ள கேசவபுறத்திற்கருகில் உள்ள மண்டபத்தில் தங்கியிருந்தார். வெகு அருகில் இருக்கின்ற ஆற்றில் ஜலம் ஓடிக்கொண்டிருந்தது. மிகவும் தீர்த்த வஸதியுடன் கூடியது. அங்கிருந்து 9-10-53 இரவு 12 மைல் தூரத்திலுள்ள குர்ரம்குண்டா என்ற ஊரில் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தார். அங்கிருந்து அன்றிரவே 11 மைல் தூரத்திலுள்ள வாயில்பாடுக்கு எழுந்தருளினர். வாசலில் ஒரு குளமும் பின்பக்கத்தில் ஒரு குளமும் இருப்பதால் தீர்த்த வஸதியுடன் கூடின பெரிய சத்திரத்தில் தங்கியிருந்தார். ஸ்ரீ அழகியசிங்கர்மழைக்காலத்தை உத்தேசித்தும் காட்டுமார்க்கமாகப் போவதை உத்தேசித்தும் இது முதல் பெங்களூர்வரையில் பிரயாணத்தை பகல்வேளையிலேயே செய்ய வேண்டும் என்று ஸங்கல்பித்துக் கொண்டு 12-10-53 பகல் 1 மணிக்கு இங்கிருந்து புறப்பட்டு 14 மைல் தூரத்திலுள்ள மதனபள்ளிக்கு எழுந்தருளினர். அங்கு எஸ். வி. வரதாச்சாரியர் முதலிய ப்ரமுகர்கள் பூர்ணகும்பத்துடனும் மேள வாத்யங்களுடனும் வரவேற்றனர். அவ்வூரில் பெரிய பஜனை மண்டபத்தில் ஸ்ரீ மாலோலன் விற்றிருந்தார். ஸ்ரீமதழகியசிங்கர் வக்கீல் வரதாச்சாரியருடைய க்ருஹத்தில் எழுந்தருளியிருந்தார். 13-10-53ல் ஸ்ரீ அஹோபில மடஸ்தாபகரான ஸ்ரீ மதாதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய வருஷதிருநக்ஷத்திரம் வேத ப்ரபந்த இதிஹாஸ புராணாதி பாராயணங்களுடன் ஸ்ரீமதழகிய சிங்கரால் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் ஸாயங்காலம் அவ்வூர் ப்ரமுகர்களின் ப்ரார்த்தனைக்கிணங்க ஸ்ரீமதழகியசிங்கர் 'ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய' வைபவத்தையும் 'ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன்' வைபவத்தையும் மிகவும் தெளிவாக எல்லோரும் புரிந்துகொள்ளும்படி உபந்யஸித்தார். ஸ்ரீ வக்கீல் எஸ். வி. வரதாச்சாரியர் ஒரு நாள் ததீயாராதனம் தன்னுடைய தாயிருக்க வேணுமென்று ஸம்பாவனை பண்ணினர். அவ்வூர்வாஸிகள் மிகவும் பக்திச்ரத்தையோடு இரவும், பகலும் இடைவிடாது திரண்டுவந்து ஸேவித்தனர்.

14-10-53 அங்கிருந்து பகல் 2 மணிக்கு புறப்பட்டு 10 மைல் தூரத்திலுள்ள ராயல்பாடுக்குஎழுந்தருளினர். அங்கிருந்துமைஸூர் ஸ்டேட் ஆரம்பமானதால் மைஸூர் கவர்மெண்ட் ஸ்ரீ அழகியசிங்கரை அவ்வூரில் நன்றாக வரவேற்கும்படி உத்திரவிட்டிருப்பதால் அவ்வூர் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், ஸர்கில் முதலியோர்கள் மேள வாத்யங்களுடன் வெகு ஆடம்பரமாக வரவேற்றனர். அங்கங்கு மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இங்கு மைஸூர் ஸ்டேட்டைச் சேர்ந்த முஸாபரி பங்களாவில் தங்கியிருந்தார். அங்கிருந்து 15-10-53 பகல்1மணிக்கு 18 மைல் தூரத்திலுள்ள ஸ்ரீனிவாஸ புரம் எழுந்தருளினர். இங்கும் மாஜிஸ்ட்ரேட் முதலிய ப்ரமுகர்கள் வரவேற்றனர். கவர்மெண்டைச் சேர்ந்த முஸாபரி பங்களாவில் தங்கியிருந்தார். அங்கிருந்து ஊர் ஒரு மைல் தூரத்திலிருந்தபோதிலும் அவ்வூரில் உள்ள தீக்ஷிதர் முதலியவர்கள் வேதகோஷத்துடன் வரவேற்றனர். அவ்வூர் வாஸிகள் பக்தி மிகுதியால் திரள் திரளாய் வந்து ஸேவித்துப் போயினர். அங்கிருந்து 16 மைல் தூரத்திலுள்ள கோலாருக்கு 17-10-53 பகல் 1 மணிக்கு புறப்பட்டு எழுந்தருளினர். அவ்வூரில் டிப்டி கமிஷனர் முதலிய ப்ரமுகர்கள் வெகு விமர்சையாக வரவேற்றனர். அவ்வூரில் வெகு ஸௌகர்யத்துடன்கூடிய மைஸூர் ஸ்டேட்டைச்சேர்ந்த ஒரு பெரிய பங்களாவில் தங்கியிருந்தார். அவ்வூரிலுள்ள எல்லா அதிகாரிகளும் ஸ்ரீமதழகிய சிங்கரை ஸேவித்து ஸ்ரீமாலோலனுடைய க்ரு

ணைக்குப் பாத்திரமானார்கள். அவ்வூரிலுள்ள வைச்யர்கள் மிகவும் பக்தி ச்ரத்தையுடன் கூடியவர்களாயிருந்தார்கள். அவர்களின் ப்ரார்த்தனைக்கிணங்க ஸ்ரீமதழகியசிங்கர் நரசாபுரம் எழுந்தருளும் ஸமயத்தில் ஸ்ரீமாலோலனுடன் பல்லக்கில் அவ்வூர் எல்லா வீதிகளிலும் ஸேவை கொடுத்துக்கொண்டு எழுந்தருளினார். இதனால் அவ்வூர் வாஸிகள் வெகு த்ருப்தியுள்ளவரானார்கள். கோலாரில் வீதிவலமானதும் 9 மைல் தூரத்திலுள்ள நரஸாபுரம் எழுந்தருளினார். அங்கு ஸ்ரீலக்ஷ்மீநாராயணன் கோவிலில் தங்கியிருந்தார். மூர்த்திகள் வெகு நன்றாய் இருக்கின்றன. அங்கிருந்து 16 மைல் தூரத்திலுள்ள உஸ்கோட்டைக்கு 20-10-53 ஸாயங்காலம் வந்துசேர்ந்தார். அவ்வூரில் அமூல்தார் லிங்கண்ணையா முதலிய ப்ரமுகர்கள் ஸ்ரீமதழகியசிங்கரை வெகு கோலாஹலத்துடன் வரவேற்றனர். மிகவும் விசாலமான பூர்ணய்யா சத்திரத்தில் தங்கியிருந்தார். அமூல்தார் முதலிய ப்ரமுகர்கள் ஸ்ரீமதழகியசிங்கரை எவ்வளவு ச்ரமமிருந்தாலும் எங்களுக்கு ஸதுபதேசம் செய்யவேண்டுமென்றுமிகவும்பக்திச்ரத்தையுடன் ப்ரார்த்தித்தார்கள். அவ்விடத்தில் தமிழில் உபந்யஸித்தாலும் அவ்வூர் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் அழகியசிங்காச்சார் மூலம் கன்னடத்தில் அதை மொழிபெயர்த்து புரிந்துகொள்கிறோம் என்று விஜ்ஞாபித்தார்கள். ஸ்ரீமதழகியசிங்கரும் பரம க்ருபையுடன் 'கலியுகத்திற்கு மிகவும் அவச்யமான தர்மம்' என்ற விஷயத்தை எடுத்துக் கொண்டு அதை எப்படி அநுஷ்டிக்கவேண்டுமென்பதை எல்லாஶாஸ்த்திரக்காரர்களுமெப்படி ஸம்மதித்திருக்கிறார்களோ அந்தப்படியே மிகவும் தெளிவாய் உபந்யஸித்தார். ஹெட்மாஸ்டர் அழகியசிங்காசாரியரும் ஸ்ரீமதழகியசிங்கர் நியமனத்தின் பேரில் அவ்வப்பொழுது கன்னடத்தில் மொழிபெயர்த்தார். அப்பொழுது கூடியிருந்த பாமர ஜனங்கள் உள்பட எல்லோரும் இந்த உபந்யாஸத்தைக் கேட்டு தன் கடமையை உணர்ந்து அகமகிழ்ந்து போனார்கள். அங்கிருந்து 22-10-53 பகல் 1 மணிக்கு 6 மைல் தூரத்திலுள்ள மேடஹல்லிக்கெழுந்தருளினார். 23-10-53 அன்று ஸ்ரீஅஹோபிலமடம் 42-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் 8-வது மாஸாராதனம் வெகு விமர்சையாய் நடந்தேறியது.

24-10-53 பகல் 2 மணிக்கு அங்கிருந்து பெங்களூர் கஸ்டோன்மெண்டில் உள்ள ஸ்ரீ கோதண்டராமர் கோயிலுக்கு எழுந்தருளினார். ஸ்ரீமதழகியசிங்கரை கோவில் ட்ரஸ்டி முதலிய ப்ரமுகர்களும், கவர்மெண்ட் ஆபீஸர்களும், ஸ்ரீகோவில் சத்ரசாமராதிகளுடன் ஶடாரியை எள்ளப்பண்ணிக் கொண்டு எதிர்கொண்டு வரவேற்றனர். ஸ்ரீமதழகியசிங்கரும் கோயிலில் பரிவட்டம் முதலிய ஸகல மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு கோயிலைச் சேர்ந்த ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தார். 25-10-53 காலை 8 மணிக்குள் விச்வரூப அபிகமன ஆராதனங்களை முடித்துக்கொண்டு அங்கிருந்து மைஸூர் பேங்குக்கருகாமையிலெழுந்தருளும்போது அவ்விடத்தில் மேயர் ஹநுமந்தய்யா, கமிஷனர், முதலிய மைஸூர் ராஜாங்க அதிகாரிகளும் ஸ்ரீமான்கள் வெங்கடரங்கமய்யங்கார், நாராயண அய்யங்கார், கோபாலஸாமி அய்யங்கார், பாஷ்யமய்யங்கார், ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ராமய்யங்கார், ராகவ அய்யங்கார், எம். சேஷாத்ரி அய்யங்கார் முதலிய அவ்வூர் ப்ரமுகர்களும் பூர்ணகும்ப சத்ர சாமராதி மரியாதையுடன் ஸ்ரீமதழகியசிங்கரை வரவேற்றனர். பிறகு ஸ்ரீமதழகியசிங்கரை தந்தப்பல்லக்கில் எள்ளப்பண்ணிக்கொண்டு ஊர்வலமாய் வந்தனர். (அட்டப் பல்லக்கில் முதல் க்ளாஸ் மரியாதைகளுடன்) ஊர்வலம் பாண்டு வாத்தியங்களுடன் வெகு விமர்சையாக நடந்தது. ஸுமார் பகல் 1 மணிக்கு ஸ்ரீமதழகியசிங்கர் துளஸித்தோட்டத்திற்கு எள்ளினார். ஸ்ரீமதழகியசிங்கர், மேயர் கமிஷனர் முதலிய அரசாங்க அதிகாரிகளும் அவ்வூர் ப்ரமுசர்களும் நடத்தின ஊர்வலத்தில் தனக்குண்டான ப்ரீதியைத் தெரிவித்து அவர்களுக்கு பல மந்த்ராக்ஷதை அனுக்ரஹித்தாயிற்று. ஸ்ரீமாலோலன் ஸுமார் 2 மணிக்கு இஜ்யாராதனம் கண்டருளினார்.

(தொடரும்)

ஸ்ரீ:

ரஸோக்திகள்

ஸாயங்காலவேளை. இரு பெண்மணிகள் உலாவச்சென்றார்கள். அவர்கள் திருப்பாற்கடற்கரையை அடைந்தார்கள். இருவரும் மிக ரஸிகமணிகள். யாரவர்கள்? ஒருத்தி ஸமுத்ரதநயை; மற்றொருத்தி ஹிமவத்புத்ரி. இருவரும் மிகவும் ரஸமாகப் பேசிவருகிறார்கள். என்ன?

மஹாலக்ஷ்மி— கிரிஜா! உன் பர்த்தா உன்னுடைய பிறந்தகத்திற்கே வந்துவிட்டாராமே. **'हिमालये हरश्शेते'** என்கிறார்களே.

பார்வதி— பத்மஜா! உன்பர்த்தாமட்டில் எங்கிருக்கின்றாராம்! உன்வீட்டில்தானே இருக்கிறார். **'हरिश्शेते महोदधौ'** என்றல்லவோ அடுத்தபடியாகச் சொல்லுகிறார்கள்.

மஹாலக்ஷ்மி— உன் பர்த்தா சாப்பாட்டிற்கில்லாமல் உன்னிடம் வந்ததற்கும், என்கணவர் என்னிடத்தில் ப்ரீதியினால் வந்ததற்கும் வித்யாஸமில்லையா? அதிருக்கட்டும். உன்புருஷர் இன்று பிக்ஷை வாங்க எங்கு சென்றிருக்கிறார்? **'भिक्षार्थी स क्व यातः'** என்று [தனமதமுடைய ஸ்த்ரீகள் பேசும் ரீதியில்] மிக அலக்ஷ்யமாகப்பேசினாள்.

பார்வதி— (மிகவும் அடக்கமாக) அழகுள்ளவளே! மஹாபலிசக்ரவர்த்தியின்யாகத்திற்குச் சென்றிருக்கலாம். **'सुतनु बलिमखे'** என்தோழி இங்குவந்து ஒரு வ்ருத்தாந்தம் சொன்னாள். அதாவது— மஹாபலியாகத்திற்கு உன்பர்த்தா குறள்மாணவனாகச் சென்றிருந்தாராம். அவரைப்பார்த்த மஹாபலி 'நீர் யார்' என்றாராம். **(कस्त्वं ब्रह्मन्!)**

வாமனன்— இதற்கு முன் நான் உம்மிடம் யாசகத்திற்கு வந்ததில்லை. **(अपूर्वः)** இப்பொழுதுதான் புதிதாக வந்திருக்கிறேன்.

மஹாபலி— நீர் எங்கு வஸிக்கிறீர்? **(क्व च तव वसतिः)**

வாமனன்— எனக்கு வீடேது வாசலேது. பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட இடமெல்லாம் என்னுடையதுதான். **(याखिला ब्रह्मसृष्टिः)**

மஹாபலி— உம்மை ரக்ஷிப்பவர் யார்? **(कस्ते त्राता)**

வாமனன்— நாதனற்றவன் நான். **(अनाथः)**

மஹாபலி— உம்முடைய தகப்பனார் எங்கே? **(क्व च तव जनकः)**

வாமனன்— எனக்குத் தகப்பனார் இருப்பதாகத் தெரியவில்லை. **(नैव तातं स्मरामि)**

மஹாபலி— பாவம். உமக்கு என்ன வேண்டும் கேளும்; அதைத்தருகிறேன். **(किं तेऽभीष्टं ददामि)**

வாமனன்— நான் ஜபதபாதிகள் பண்ணுவதற்கு மூன்றடி பூமி கொடுத்தால் போதும். **(त्रिपदपरिमिता भूमिः)**

என்று அங்கு மஹாபலியிடம் மூன்றடி மண் யாசகம் கேட்ட ஸம்வாதத்தைத் தோழி இப்பொழுதுதான் சொன்னாள்.

மஹாலக்ஷ்மி— உன் புருஷர் நன்றாகக் கூத்தாடுவாராம். அதனால் அவருக்கு நடராஜர் என்று பெயராம். இன்று எங்கு கூத்தாடச் சென்றிருக்கிறார்? போகட்டும்; அதிலாவது நாலு காசு கிடைக்கட்டும். **'ताण्डवं क्वाद्य भद्रे'**

பார்வதி— உன் தோழியும் என் தோழியும் தெருவில் பேசிநின்றார்கள். அப்பொழுது உன் தோழி 'குடக்கூத்தன் கோவிந்தனை இங்கே போகக்கண்டீரோ' என்று கேட்டாள். அதற்கு என்தோழி 'வனமாலை மினுங்க நின்று விளையாட ப்ருந்தாவனத்தில் கண்டோமே' என்று சொன்னாள். இது என் காதில் கேட்டது. ஆகையால் ப்ருந்தாவனத்திற்குச் சென்றிருக்கலாம். **'मन्येवृन्दावनान्ते'**

மஹாலக்ஷ்மி— எங்கேயடி அந்த மான்குட்டி **'क्वनु मृगशिशुः'**

பார்வதி— அந்த பன்றி எங்கே போயிற்றோ அறியேன். **'नैव जाने वराहं'** என்று பகவானின் வராஹாவதாரத்தை நினைப்பூட்டுகிறாள்.

மஹாலக்ஷ்மி— குழந்தாய்! உன்னுடைய பர்த்தா எப்பொழுதும் கட்டித்தழுவும் கிழ எருதை எங்கேயாவது பார்த்தாயா? **'बाले! कश्चिन्न दृष्टः जरठवृषपतिः'**

பார்வதி— எனக்கென்ன தெரியும்? கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந்துண்ணும் அறி

வொன்றுமில்லாத ஆயர்குலத்துதித்த கோபாலனைக் கேட்டால் தெரியும். **'गोप एवास्य वेत्ता'** என்றிவ்வாறு ஒவ்வொன்றிற்கும் மிக அழகான ஸமாதானம் சொல்லிவந்தாள் பார்வதி. இவ்விதம் ரஸிகர்கள் இருவர் கூடிப் பேசும் பேச்சின் அழகை என்னென்று பேசுவது! இதை ஆலங்காரிகர்கள் வக்ரோக்தி என்றாலும் நமக்கிது ரஸோக்தியாகவே இருக்கின்றது.

भिक्षार्थी स क्व यातस्सुतनु बलिमखे ताण्डवं
क्वाद्य भद्रे! मन्ये वृन्दावनान्ते क्वनु स मृग
शिशुर्नैव जाने वराहम्। बाले! कच्चिन्न दृष्टो
जरठवृषपतिर्गोप एवास्य वेत्ता लीलासंलाप
इत्थं जलनिधिहिमवत्कन्ययोस्त्रायतां नः॥

இவ்விதம் இரு பெரிய மஹான்களுக்குள் நடந்த ஸம்வாதத்தையும் இங்கு விஜ்ஞாபித்துக்கொள்ளுகின்றேன்.

ஸுமார் 27 வருஷங்களுக்குமுன் திருவஹீந்திரபுரத்தில் ஒரு வித்வத்ஸதஸ் நடந்தது. அநேகம் பண்டிதர்கள் வந்திருந்தார்கள். அதற்கு அக்ராஸநாதிபதிகளாக நம் ஸ்ரீபெரிய அழகியசிங்கர், (பூர்வாச்ரமம்) ஸ்ரீசேட்லூர் ஸ்வாமி, ஸ்ரீகோஷ்டீபுரம் ஸ்வாமி போன்ற மஹாவித்வான்களும் வந்திருந்து ஸபையை அலங்கரித்தார்கள். அவ்வமயம் ஸ்ரீதேசிகனின் அவதார உத்ஸவமும் நடந்தது. ஒரு நாளிரவு வேதபாராயணத்திற்குப் பின் இம்மூன்று மஹான்களும், மற்றுமுள்ள பண்டிதர்களும் அநுயாத்ரையாகச்சென்றார்கள். **'काव्यशास्त्रविनोदेन कालो गच्छति धीमतां'** என்னும் ரீதியில் ஶாஸ்த்ர விசாரங்கள் நடந்துவந்தன. மத்தியில் ரஸிகர்களுக்குள் 'மணி உகந்தமால்' யார் என்கிற சர்ச்சை உண்டாயிற்று.

ஸ்ரீசேட்லூர் ஸ்வாமி— நம் ஸ்வாமி தேசிகனுக்கு தேவநாயகனிடத்தில்தான் ஈடுபாடு அதிகம். தன்னை தேவநாதன் **'सूत्रानुबद्धशकुनिक्रमतः'** என்கிற (சாந்தோக்யத்தில் சொல்லிய படி) ரீதியில் இழுத்துக்கொண்டதாக அநுஸந்திக்கிறார். மற்றோரிடத்தில் இப்படி உண்டோ?

ஸ்ரீபெரிய அழகியசிங்கர்— உங்கள்பெருமாளை ஸேவிக்காமல் போன தேசிகனை தேவநாதன் வலைபோட்டு இழுத்துக்கொண்டார். எங்க பெருமாள் வரதன் விஷயத்தில் அப்படியன்று. 'எத்திசையுமுழன்றோடி இளைத்துவிழும்காகம் போல்.........அத்திகிரி அருளாளர்க்கடைக்கலம் நான் புகுந்தேனே' என்று வேறு புகலிடமில்லாமல் அருள்வரதன் திருவடிகளை வந்தடைந்ததாக ஸ்வாமி அநுஸந்திப்பதால் அருளாளப்ரேமைதான் மிக அதிகம்.

ஸ்ரீசேட்லூர் ஸ்வாமி— 'அயிந்தைவாழுமஞ்செனவே யருள்பொழியும் வள்ளலே நின் வடிவழகு மறவாதார் பிறவாதாரே' என்று தேவநாதன் திருமேனியின் அழகிலீடுபட்டு அவ்வழகை மறவாது அநுபவிப்பவர் பிறவாதாரே என்று ஸாதித்திருப்பதைத் திருவுள்ளம் பற்றவேணும்.

ஸ்ரீபெரிய அழகியசிங்கர்— ஸ்வாமிந்! உங்கள் பெருமாளினழகைக்கண்டு ஒருதரம் ஸேவித்தவர்கள் மறுபடியும் ஸேவிக்க மாட்டார்கள். எங்க அருள்வரதர் அழகில் ஆழங்கால்பட்ட ஸ்வாமிதேசிகன் என்ன ஸாதித்தார்தெரியுமா? **'वैकुण्ठवासेऽपि न मेऽभिलाषः'** என்றார். ஆகையால் 'மணி உகந்த மால்' தேவாதிராஜனை அருள் வரதன்தான் என்று ஸாதிக்கும்படியிருந்ததாம்.

இவ்விதம் ஶ்லோகத்திற்குப் பாசுரம், பாசுரத்திற்கு ஶ்லோகம் என்னும் ரீதியில் கேள்வியும் ஸமாதானமும் சொல்லிவருவதை அருகிலிருந்து ஆநந்தித்த பண்டிதர்கள் **'सतां सद्भिस्सङ्गः कथमपि हि पुण्येन भवति'** என்றபடி நம்முடைய பாக்யவசத்தால்தான் இருமஹான்களுக்கும் ரஸமான ஸம்வாதம் நடந்தது என்று சொல்லிப்போந்தார்களாம்.

कस्त्वं ब्रह्मन्! अपूर्वः क्व च तव वसतिर्याखिला
ब्रह्मसृष्टिः कस्ते त्राता ह्यनाथः क्व च तव
जनकः नैव तातं स्मरामि। किं तेऽभीष्टं ददामि
त्रिपदपरिमिता भूमिरत्यल्पमेतत्त्रैलोक्य भाव
गर्भं बलिमिति निगदन्वामनो वस्स पायात्॥

ஸ்ரீ:

*ஜித கர்ணன்

இவ்வுலகில் மனிதனாகப் பிறந்த சிலர் சிறந்த தன் குணங்களாலும், ஒழுக்கங்களாலும் புகழை யடைந்து வெகு காலம் வரை தங்களது பெயர் கொண்டாடப்பட்டுவரும்படி நடந்து வருகிறார்கள். அம்மாதிரி மனிதருள் மஹாபாரதப்ரஸித்தனான கர்ணனும் ஒருவன். அவன் தன்னிடமிருந்த ஔதார்யமென்னும் குணத்தினால் அநேக பொருள்களைப் பிறருக்குக்கொடுத்து 'கொடையிற் சிறந்தவன்' என உலகில் புகழப்பட்டு விளங்கினான். ஔதார்யமாவது:– பிறரிடமிருந்து எவ்விதமான ப்ரதிப்ரயோஜனத்தையும் எதிர் பாராமல் யாசிக்குமவர்களுடைய அபேக்ஷிதார்த்தத்தைத் தருவது என்னும் குணம். ஆனால் சிலர் புகழையும் பிறரது ஸ்துதியையும் எண்ணிக் கொடுத்துதவுவார்கள்; அது டம்பத்திற் சேருமே தவிர, ஔதார்யத்திற் சேராது. இக்குணம் அநேகரிடம் காணப்படினும் கர்ணனிடமிருந்தது விலக்ஷணமானது. அதை ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவே வியந்து கொண்டாடியுள்ளார். இது பற்றி ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் (42-வது பட்டம்) ஸாதித்த கதையை விஜ்ஞாபிக்கிறேன்.

கர்ணன் துர்யோதனனின் தேர்ப்பாகனால் வளர்க்கப்பட்டவனாக இருப்பினும், அவனது திறமையையும் வீரத்தையும் கண்டு அவனைத் தன் ஸகாவாக்கிக்கொண்டு, அவனுக்கு ராஜ போகங்களையும் கொடுத்துத் தோழமை பழகி வந்தான் துர்யோதனன். ஆயினும் உலகில் கர்ணனுக்குக் கொடையாளி என்ற பெயர் வருவதையும் அரசனான தனக்கு அப்பெயர் வாராததையுங்கண்டு வேதனையடையலானான். தினந்தோறும் தானங்களைப் பண்ணியும் யாசகர்களுக்கு நிறைய வாரிக்கொடுத்தும் வரலானான். எனினும் கர்ணனின் புகழ் மேலோங்கியது. துர்யோதனனை ஒருவரும் கொடையாளிஎனக் கூறவில்லை. அதற்குக் காரணமென்னவென்று யோசிக்கலானான்.

ஒரு ஸமயம் ஸ்ரீ க்ருஷ்ணன் துர்யோதனனிடம் எழுந்தருளினார். அவரைக்கண்டு வரவேற்று உபசரித்து, எழுந்தருளிய காரணம் என்னவென்று விசாரித்தான். அப்போது இவனது மனத்திலுள்ள கலக்கத்தை யறிந்த கண்ணன், இவனுக்குத் தத்துவத்தை உணர்விக்க எண்ணங்கொண்டு 'துர்யோதன! நான் ஒரு யாகத்தை வருஷருதுவில் நடத்த உத்தேசித்திருக்கிறேன். அதற்கு வேண்டிய விறகுகளை உன்னிடம் கேட்டு வாங்கிக்கொண்டு போகலாமென்று வந்தேன். நீ கொடுத்தால் நல்லது. இங்கு வந்த காரணம் இது தான்' என்றார். இதைக் கேட்ட துர்யோதனன் 'இது ஒரு பெரிய வஸ்துவா? எப்பொழுதோ பண்ணப்போகும் யாகத்திற்கு விறகிற்கு இப்பொழுது என்ன அவஸரம்? அப்பொழுது கேட்டனுப்பினால் கொடுக்க மாட்டேனா? யாரிடமாவது சொல்லியனுப்பினால் போராதா? தேவரீரே வரவேண்டுமா? ஸரி; ஆகட்டும் அவசியம் கொடுக்கிறேன்' என்றான். அதற்குக் கண்ணன், 'வர்ஷாகாலத்தில் மழையினால் விறகு உலர்ந்ததாகக் கிடைக்காது; முன்னதாகத் தெரிவித்தாலல்லவோ நீ ஸம்பாதித்துக் கொடுக்க முடியும்! அவசியம் கொடுக்கவேண்டும்' என்றார். அவனும் இது என்னால் ஸம்பாதித்துத் தர முடியாதா? அவசியம் தருகிறேன் என்றான்.

கண்ணன் அவ்விடமிருந்து கிளம்பி எழுந்தருளும்போது, 'துர்யோதன! ராஜகார்யங்கள் அதிகமாக இருப்பதால் யாகத்திற்கு விறகு கேட்டது நினைவிருக்கட்டும். வருஷருதுவில்

---

*ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் மங்களத்திலுள்ள 'ஜிதகுண:' என்ற பதத்தின் விவரணமாக இந்த வ்யாஸம் விஜ்ஞாபிக்கப்படுகிறது.

யாகம். மறந்து விடாதே' என்று மறுபடியும் வற்புறுத்திவிட்டு எழுந்தருளினார்.

சில மாதங்கள் சென்றன. வருஷாகாலம் வந்தது. மழை விடாமல் கொட்டவாரம்பித்தது. ஒரு நாள்கூட மழை கொட்டாமலிருக்கவில்லை. க்ருஷ்ணனும் துர்யோதனனிடம் நூறு வண்டிகளையனுப்பி, வண்டியோட்டிகளை 'நான்கு மாதங்களுக்கு முன்பே துர்யோதனனிடம் யாகத்திற்கு விறகு கேட்டிருக்கிறேன். கொடுப்பான். கொடுக்காவிடில் கர்ணனிடம் சென்று கேளுங்கள் கொடுப்பான். வாங்கிக்கொண்டு துர்யோதனனின் அரண்மனைவாசல் வழியாக வண்டிகளை ஓட்டிக்கொண்டு வாருங்கள்' என்று சொல்லியனுப்பினார்.

வண்டிக்காரர்கள் துர்யோதனனிடம் வந்து விஷயத்தைச் சொல்லி, வண்டி வந்திருப்பதாகத் தெரிவித்தனர். துர்யோதனன் யோசித்தான். மறந்து விட்டதை உணர்ந்தான். ஆயினும் என்ன செய்வது எனத் தெரியவில்லை. 'திடீரென்று வண்டியனுப்பினால் விறகு அகப்படுமா! நான்கு மாதங்களுக்கு முன்பு சொன்னால் போதுமா? ஒரு வாரத்திற்கு முன்பு ஞாபகப்படுத்த வேண்டாமா? மழை விடாமல் கொட்டுகையில் உலர்ந்த விறகு எப்படிக் கிடைக்கும்? இப்பொழுது வேறு எங்காவது பார்த்துக்கொள்ளச் சொல்லுங்கள். மறு ஸமயம் பார்க்கலாம்' என்று சொல்லியனுப்பிவிட்டான்.

அவர்களும் அங்கிருந்து கர்ணனிடம் சென்று 'ஸ்ரீக்ருஷ்ணன் ஒரு யாகம் செய்யப்போகிறார்; அதற்காக நூறு வண்டி உலர்ந்த விறகு தங்களைக் கேட்டு வாங்கிக்கொண்டு வருமாறு வண்டிகளை அனுப்பியிருக்கிறார்' என்று சொன்னார்கள். இதைக் கேட்டதும் கர்ணன் ஆனந்தபரவசனாகி 'இது பெரிய பொருளா? கண்ணன் என்னை ஒரு பொருளாக மதித்துக் கேட்டனுப்பினாரா! என் பாக்யமே பாக்யம்' என்று சொல்லி அகமகிழ்ந்தான். உடனே தன்னிடம் விறகில்லாததால் தனது வேலையாட்களை விட்டுப் புதியதான அழகியமாளிகைகளை இடித்து, அதிலிருந்த கம்பம் உத்திரம் முதலியவற்றைப் பிளந்து வண்டிகளில் ஏற்றி அனுப்ப உத்தரவிட்டான். வண்டிக்காரர்களிடம் 'இப்பொழுது கேட்டதைக் கொடுத்திருக்கிறேன். இன்னும் தேவையாக இருந்து தெரிவித்தால் அனுப்பி வைக்கிறேன். கண்ணனுக்குக் கொடுக்கும்படியான பாக்யம் கிடைத்தது பற்றி மிகவும் ஸந்தோஷம் என்று ஸ்ரீ கண்ணனிடம் சொல்லுங்கள்' என்று சொல்லியனுப்பினான். வண்டிக்காரர்கள் அங்கிருந்து வண்டிகளை துர்யோதனனுடைய அரண்மனை வழியாக ஓட்டிச் சென்றனர். விறகுடன் வண்டிகள் செல்வதை அரண்மனையிலிருந்து கண்ட துர்யோதனன், அவ் வண்டிகளை நிறுத்தி எது விறகு என்று கேட்டனுப்பினான். அவர்கள் கர்ணனிடம் வாங்கிச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றனர். இதைக் கேட்டு துர்யோதனன் முன்னைவிட அதிகமாக வ்யாகுலமடைந்தான்.

பிறகு ஒரு நாள் கண்ணன் அங்கு எழுந்தருளினார். துர்யோதனனிடம், 'உன்னையே நம்பியிருந்தால் யாகம் எப்படி நடந்திருக்கும்? கர்ணன் மஹோதாரனாக இருந்தபடியால் நான் கேட்டவுடன் கொடுத்தனுப்பினான். முதலில் கேட்டபோதே ஸௌகர்யப்படாது என்று நீ சொல்லியிருந்தால் அலைச்சலில்லாமல் இருந்திருக்குமே!' என்றார். துர்யோதனனுக்கு மிக வருத்தமுண்டாயிற்று. 'க்ருஷ்ண! நீர் கேட்டனுப்பியபோது முன்னேற்பாடு செய்யாதபடியால் விறகனுப்ப முடியவில்லை. அது தவறு தான். அதற்காக எனக்குக் கீழ்ப்பட்டவனும் என்னை விடக் குறைந்த ஐச்வர்யமுள்ளவனுமான கர்ணனை மஹோதாரனென்று கூறலாமா? எவ்விதம் என்னை விடக் கர்ணன் கொடையில் மேம்பட்டவன் எனக்கேட்டான்.

அதற்கு ஸ்ரீ க்ருஷ்ணன்,

'யாவிதா ஸோஃஸௌதே
வாம்ஸி தாஃயிகவ்ருக்ஷ: ।
கநூவ ஜஃயம் வ ஃபிதெ
தவூாதணஷஃவாயிகூ: ॥'

[கர்ணனிடம் ஒரு பொருளை விரும்பி யாசகன் வந்தால் கர்ணன் மிக

ஸந்தோஷமடைகிறான். கர்ணன் யாசகன் அபேக்ஷித்ததை விட அதிகம் கொடுக்கிறான். அது மட்டுமல்ல; இப்பொழுது இது தான் கொடுக்க முடிந்தது; மறு ஸமயம் இன்னும் அதிகமாகத் தருகிறேன்; இப்பொழுது கொஞ்சமாகக் கிடைத்ததென்று எண்ணி உதாஸீனம் செய்யாமல் எழுந்தருளி, வேண்டியதை வாங்கிப் போக வேண்டும். தேவரீர் எழுந்தருளியது அடியேனுடைய ஸுக்ருதபலமேயாகும் என்று பலவித ப்ரியமான வார்த்தைகளைச் சொல்லி வழியனுப்புகிறான். ஆகையால் உன்னை விடக் கர்ணன் மேலான உதார குணமுள்ளவன்] என்றார்.

இதைக் கேட்டவுடன் துர்யோதனனும் கர்ணனிடமுள்ள ஔதார்ய விசேஷத்தைக் கண்டு மிகவும்ஸந்துஷ்டனானான். இம்மாதிரி கர்ணனின் உதாரகுணத்தைப் பல கதைகள் விளக்கிக் கூறும். ஆயினும் இதில் ஸ்ரீ கண்ணபிரானே உகந்து கொண்டாடியிருப்பது மேன்மையைத் தருவதாகும்.

இம்மாதிரிசிறந்த ஔதார்யகுணவான்கள் அவ்வப்போது தோன்றிவிளங்கிவருகின்றனர். இவர்கள்மறைந்தாலும் இவர்களதுகுணங்களும் கீர்த்தியும் காலமுள்ளளவும் கொண்டாடப்பட்டுவருகிறது. ஸ்ரீகளத்தூர் அழகியசிங்கரும் இம்மாதிரிகுணமுடையவராகஎழுந்தருளியிருந்தது ப்ரஸித்தமானவிஷயம். ஸ்ரீ அழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் எழுந்தருளியிருந்த போது தான் செய்யவேண்டிய ச்ராத்தம் வந்தது. அக்காலத்தில் வாழையிலை கிடைப்பது அரிதாயிருந்தது. எங்கேயோ ச்ரமப்பட்டு வாழையிலையைத் திருக்குமாரர் ஸம்பாதித்து வைத்திருந்தார். அதே தினத்தில் அவ்வூரில் மற்றொரு ஸ்வாமியின் க்ருஹத்தில் ச்ராத்தம் நடைபெற வேண்டியிருந்தது. அவர்களுக்கு இலை கிடைக்கவேயில்லை. அவர்கள் ஸ்ரீ ஸ்வாமியை அணுகி, வாழையிலை கிடைக்கவில்லை ச்ராத்தகார்யம் நடக்கவேணும் என்று விஜ்ஞாபித்தார்களாம். ஸ்வாமி உள்ளே சென்று வாங்கி வைத்திருந்த இலையைக் கட்டோடு கொடுத்தனுப்பியாயிற்றாம். உடனே குமாரர் வந்து இச்செய்தியை அறிந்து இப்படியும்செய்யலாமோ? நம்மகத்தில் ச்ராத்தம் எப்படி நடப்பது? என்றனர். ஸ்ரீ அழகியசிங்கர் அதற்கு நமக்கில்லையெனில் நாம் எப்படியாவது ஸம்பாதித்துக்கொள்ளலாம்; பாவம், அவர் தனிமையாக இருக்கிறார். எப்படி ஸம்பாதிப்பார்? அவரகத்து ச்ராத்தம் நிற்கலாமா? ஆகையால் கொடுத்து விட்டேன் என்று ஸாதித்தாராம். பிறகு வேறு இலைகளை பரிச்ரமப்பட்டு ஸம்பாதித்துக் காரியம் நடைபெற்றதாம்.

ஆக தனக்கு மிக அவசியமாக வேண்டியிருப்பினும் அதைப் பொருட்படுத்தாமல் யாசிப்பவர்களுக்குக் கொடுப்பதே ஸ்ரீ அழகியசிங்கரது ஸ்வபாவமாம். இம்மாதிரி ஸ்ரீ களத்தூர் அழகியசிங்கர் விஷயமாக ஒவ்வொரு தினமும் நடந்த வ்ருத்தாந்தங்களை அநேகம் பெரியோர் பணிப்பர். கர்ணனது ஔதார்யத்தைக் காட்டிலும் அழகியசிங்கரது ஔதார்யம் மிக மேம்பட்டது என்றும் கூறுவர்.

ஸமீபகாலத்தில் நாம்இக்குணத்தை 42வது பட்டம்ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் கண்கூடாகக் கண்டோம். ஸ்ரீ அழகியசிங்கர் லோகோபகாரகமான பலகாரியங்களை நடத்தியும், மேல் மேலும் நடக்கவேண்டியஏற்பாடுகளைச்செய்தும் வந்தது அந்த ஔதார்யப்பெருக்காலே தான். ஆஸ்தான நிர்வாஹத்தை ஏற்றுக்கொண்டவுடனே பிறரது ப்ரார்த்தனையோ நிர்பந்தமோ இல்லாமல் கர்தவ்யதாப்ரதிஜ்ஞா பூர்வகமாக (1) ஸ்ரீமாலோலவித்வத்ஸபையைக் கூட்டி விசிஷ்டாத்வைத வேதாந்திகளின் வாக்யார்த்தங்களைக்கேட்டு யாரும்,எப்போதும் கொடுத்திராதபடி ஸம்பாவனையையும், கமனாகமனமார்க்கவ்யயத்தையும் கொடுத்து பண்டிதர்களிடம் உதாரராக எழுந்தருளியிருந்தது.

(2) வேத, ப்ரபந்த சாஸ்த்ரங்களை அத்யயனம் செய்யும் வித்யார்த்திகளுக்கு லோகத்திலிருக்கும் அஸௌகர்யங்களையும், வித்யைகளுக்கு ஏற்பட்ட க்ஷோபத்தையும் கண்டு, அதிவிலக்ஷணமாக பாடசாலையைஸ்தாபித்து அநேக ஸ்ரீவைஷ்ணவ வித்யார்த்திகளுக்கு ராஜகீய நிர்ப்பந்தங்களிருந்த காலங்களிலும் போஜனாதி

வசதிகளை குறைவறநடத்தி அத்யயநம் பண்ணிவித்தது.

(3) ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்காக 'ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகையை வரவு செலவு கணக்குகவனியாமல் தகுந்தஅதிகாரிகளை வைத்து நடத்திவந்தது.

(4) ஸ்ரீஸன்னிதியில் ஸாமான்யஶாஸ்த்ரங்களை அதிகரித்த வித்யார்த்திகளுக்கு வேதாந்த காலக்ஷேபங்களை ஸாதிக்கத் திருவுள்ளம் பற்றி அவர்களுக்கு தேஹயாத்ரை செவ்வனேநடக்க வேண்டிய வசதிகளையும் இதர ஸௌகர்யங்களையும் செய்துகொடுத்து அநேக தடவை க்ரந்த சதுஷ்டயகாலக்ஷேபங்களை ஸாதித்துவந்தது.

(5) அநேக இடங்களில் சிறந்த பண்டிதர்களுக்கு உபசாரங்களைச் செய்துகொடுத்து விசிஷ்டாத்வைத மதம்பற்றிய உபந்யாஸங்களைச் செய்துவந்தது. இன்னும் இம்மாதிரியான கார்யங்கள் அநேகம் உள்ளன.

இவையெல்லாம் ஸ்ரீ அழகியசிங்கர் காலத்தில் சிஷ்யர்களின் மஹத்தான புண்யபரிபாகத்தினுல் ஏற்பட்டவை. இதற்கு மூலகாரணம் ஸ்ரீ அழகியசிங்காது ஔதார்யமே தவிர வேறில்லை. ஏனையோரது ஔதார்யகுணத்தினுல்அந்தந்த காலத்திலுள்ளவர்கள் பலனடைந்தனர். நம் ஸ்ரீ அழகியசிங்காது ஔதார்யமோவெனில், அக்காலத்தவரும், இக்காலத்தவரும், பிற்காலத்தவரும் பயனடைந்து உய்யும் வண்ணம் விளங்கிவருகிறது.

சென்ற வருஷம் தைமீ ஸ்ரீ மாலோலவித்வத்ஸபையை நடத்தமுடியாதபடி திருமேனி அஸ்வஸ்த்தமானபோதும், நடக்கவேண்டிய ஸதஸ்ஸிற்கு எழுந்தருளக்கூடிய வித்வான்கள் அனைவருக்கும் ஸம்பாவனையை அனுப்பிவைத்தது பரமோதாரதையைப்ரகாசப்படுத்திற்று.

இவைகளைக் காட்டிலும் தனக்குப் பிறகு ஆஸ்தானத்திற்கு ஸ்ரீ சின்ன அழகியசிங்கரை ஏற்படுத்தி இன்னும் பலகாலம் நமது க்ஷேமத்திற்காகவேண்டிய கார்யங்களை நடத்திவாத் திருவுள்ளம் பற்றியதும் ஔதார்யத்தினுலேயே.

பிறர் யாசித்த பொருளைக் கொடுத்தோரது உதார குணத்தைவிட பிறர் அபேக்ஷிக்காமலேயே, அவர்களுடைய க்ஷேமங்களைக் கருதி அநேகம் உபகாரங்களைச் செய்தவரது உதார குணம் மேம்பட்டதாகையால் பரமோதாரராக ஸ்ரீ அழகியசிங்கர் விளங்கிவந்தது மிகவும் போற்றத் தகுந்தது அல்லவா? இதனுலேயே 'ஜிதகணஃஸ்ய ஓாநாகூ' என்று ஸ்ரீ அழகியசிங்கரின் மங்களத்தில் அமைந்துள்ளது. கர்ணனையும் மற்றுமுள்ள உதாரபுருஷர்களையும் கிட்டியாசித்தவர்கள் யாசித்த த்ரவ்யத்திலேயே தங்களது வழிச்செலவையும் செய்துகொள்ளவேண்டியிருந்தது. நம் ஸ்ரீ அழகியசிங்கர் யாசித்த பொருள்களையும் கொடுத்து வழிச்செலவுக்கு தனியாக கொடுத்துவந்ததால்தான் ஜிதகர்ணரானுர் என்று அதற்கு காரணத்தைசொல்லுவார்கள். இதேபொருள் ஸ்ரீ அழகியசிங்கரின் வைபவஸஂதையில் 'ஹகதாஹ்விடுதஷாநகவு ஷதிகா வ்யநாவடெ ராஜதெ' என்று கடைசியில் கல்பவ்ருக்ஷமாக நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீ அழகியசிங்கர் அர்ச்சையிலும் பக்தர்களுடைய ஸர்வாபீஷ்டங்களையும் கொடுத்துரக்ஷிப்பர் என்னுமர்த்தம் ஸ்பஷ்டமாகிறது. இப்படிப்பட்ட குணமுடைய ஸ்ரீ அழகியசிங்காது திருவவதார திருநன்னுளில், ஸ்ரீ அழகியசிங்கரைப் போற்றியுகந்து, புந்தியுள்கொண்டு, பொங்குபுகழ்சாத்தி வளர்த்தால் ஐஹிகாமுஷ்மிகமான ஸகலச்ரேயஸ்ஸுக்களும் உண்டாகும் என்பது திண்ணம்.

'ஜிதகணஃஸ்ய ஓாநாஷெ ஜிதராஜஸ்ய ஹாஷணாகூ।
ஓாஷிக்ஷாஷிஷயாவஃணஃஸ்ஷெ ஹவதஂ உஜஜு ॥'

ஸ்ரீ:

ஸ்வாகதபத்ரிகைகள்

(1)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 1

[illegible]
[illegible] 2

[illegible] 1824 [illegible]
(16—11—1901)
[illegible] 3

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 4

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 5

[illegible] 1873 [illegible]
[illegible]
[illegible]
[illegible] 6

[illegible] 1875 [illegible]
[illegible] (13-3-53)
[illegible] 43 [illegible]
[illegible] 7

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 8

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 9

[illegible]
[illegible] 10

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 11

[illegible] (கரூர்) [illegible]
[illegible]
[illegible]
[illegible], மைஸூர்.

(2)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 1

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 2

[illegible]
[illegible] 3

[illegible]
[illegible] 4

[illegible]
[illegible] 5

[illegible] } [illegible]
[illegible] (9—11—1953) } 3. [illegible]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விஜய ௵ தை ௴ 1954 ௵ ஜனவரி–பிப்ரவரி ௴

[உத்தராயணம்; ஹேமந்த ருது; மகர ௴]

17—1—54	4௳	ஞாயிற்றுக்கிழமை	திருவாதிரை; ஸ்ரீ அஹோபிலமடம் 38-வது பட்டம் (திருக்குடந்தை) ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
18—1—54	5௳	திங்கட்கிழமை	சந்த்ர க்ரஹணம்.
21—1—54	8௳	வியாழக்கிழமை	மகம்; திருமழிசைப்பிரான் திருநக்ஷத்ரம்.
23—1—54	10௳	சனிக்கிழமை	பஞ்சமி திதி.
24—1—54	11௳	ஞாயிற்றுக்கிழமை	அதிதி; 13-வது வார்ஷிக ஸ்ரீமாலோல வித்வத்ஸபை ஆரம்பம்.
25—1—54	12௳	திங்கட்கிழமை	ஷஷ்டி திதி; ஹஸ்தம்; ஸ்ரீகூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்.
29—1—54	16௳	வெள்ளிக்கிழமை	ஸ்ரீவீரராகவன் த்வஜாரோஹணம்.
30—1—54	17௳	சனிக்கிழமை	ஸர்வ ஏகாதசி.
31—1—54	18௳	ஞாயிற்றுக்கிழமை	ஸ்ரீவீரராகவன் கருடோத்ஸவம்.
2—2—54	20௳	செவ்வாய்க்கிழமை	உத்திராடம்; ஸ்ரீஅஹோபிலமடம் 42-வது பட்டம் (இஞ்சிமேடு) ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
3—2—54	21௳	புதன்கிழமை	ஸர்வ அமாவாஸ்யை.
4—2—54	22௳	வியாழக்கிழமை	ஸ்ரீவீரராகவன் திருத்தேர்.
7—2—54	25௳	ஞாயிற்றுக்கிழமை	சதுர்த்தி-பஞ்சமி திதித்வயம்.
10—2—54	28௳	புதன்கிழமை	ரதஸப்தமி.
11—2—54	29௳	வியாழக்கிழமை	மகர சுக்ல நவமிதிதி.
12—2—54	மாசி௴ 1௳	வெள்ளிக்கிழமை	கும்ப சுக்ல தசமிதிதி; கும்ப ரவி 20-12. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)
13—2—54	2௳	சனிக்கிழமை	கும்ப சுக்ல ஏகாதசிதிதி; ஸர்வ ஏகாதசி.
15—2—54	4௳	திங்கட்கிழமை	புனர்வஸு; குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்.

குறிப்பு:— 5௳ திங்கட்கிழமை சந்த்ரக்ரஹணம். அன்று பௌர்ணமிதிதி ச்ராத்தத்தைப் பண்ணலாம். 6௳ பகல் பூராவும் போஜனம் செய்யக்கூடாது. ப்ரதமை திதி ச்ராத்தத்தை மறுநாள் 7௳ புதன்கிழமை செய்யவேண்டும்.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய உபயவேதாந்தாசார்ய ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகனால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீமாலோல வித்வத்ஸதஸ்ஸின் 13-வது வார்ஷிகஸதஸ் தைமீ 11௳ ஞாயிற்றுக்கிழமை உபக்ரமித்து 20௳ திருநக்ஷத்திரத்தன்று பூர்த்தியடைவதால் ஷ ஸதஸ்ஸிற்கு விசிஷ்டாத்வைத வேதாந்தத்தில் வாக்யார்த்தம் சொல்லக்கூடிய வித்வான்களும், ஆஸ்திகர்களும் எழுந்தருளி வாக்யார்த்தங்களைச் சொல்லியும், சொல்வதைக் கேட்டு ஆநந்தித்தும், ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹத்தையும், பலமந்த்ராக்ஷதையையும் பெற்றுக்கொள்ளும்படி ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீகார்யம்.

N. B:— ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திரத்திற்காக அன்றுமுதல்(ஸதஸ் ஆரம்பம் முதல்) திவ்யப்ரபந்த, வேதபாராயணங்கள் நடப்பதால் முக்கியமாக ஆரம்பத்திலேயே எல்லாஸ்வாமிகளும் எழுந்தருளவேண்டும். குறைந்தபக்ஷம் 7 நாளாவது அவச்யம் ஸதஸ்ஸில் ஸந்நிஹிதர்களாய் இருக்கவேண்டும். அப்படியிருக்க அஸௌகர்யமுள்ளவர்கள் தங்களுடைய அஸௌகர்யத்திற்குக் காரணத்தையும் முன்னதாக தைமீ 7௳க்குள் [ஜனவரி 20௳] ஸ்ரீஸந்நிதிக்குக் கிடைக்கும்படி பத்ரிகை அனுப்பி வைத்தால் ஏற்கனவே ஸதஸ்ஸில் அந்வயித்திருந்தால் யதோசிதம் ஸம்பாவனை அவர்களுடைய விலாஸத்திற்கு அனுப்பப்படும்.

N. B:— ஸலக்ஷணகனபாடிகள் அவச்யம் 10 நாளிருந்து கைங்கர்யம் பண்ண வேண்டும். புதியதாக ஸதஸ்ஸில் அந்வயிக்க இஷ்டப்பட்டவர்கள் 15—1—54 க்குள் கிடைக்கும்படி விஜ்ஞாபநபத்ரிகை அவச்யம் அனுப்பவேண்டும். ஸதஸ்ஸை இவ்வருஷம் கோயம்புத்தூரில் நடத்துவதாக ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம்பற்றியாகியிருக்கிறது.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobila-mutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Editor Eachambadi. T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobila Mutt Sanskrit College, Madurantakam.